உ

ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

தமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது

தவம் பணி மலர்

இதழ் 3 | சித்தார்த்தி வருஷம் தை மாதம் 11ம் திகதி | வெள்ளிக்கிழமை [25 - 1 - 1980] | சுடர் 7

# ஒலி பெருக்கும் பாவிகளே ஊர்மக்களை அமைதியாக வழிபட விடுங்கள்

## சைவநெறியில் ஆரம்பம் ஆடம்பரம் இரண்டும் வேண்டாத வஞ்சனைகள்

கீழே நாம் தருகின்ற தேவாரத்தை நோக்கினால் அதில் தமது பதிகத்தில் சமணர் புத்தர் சொற்கள் வழிகளைப்பின்பற்றுதீர் ஏன் எனில் அவர்களுடைய வழிகள் மார்க்கங்கள் உண்மை உணர்விற்கு பொருத்தம் அற்றது என்றவகை திருஞானசம்பந்தர் தெரிவிக்கின்றார். அதில் சமணர் புத்தர்களது நிலைமுன்னாகப் பேசி அகாவது வேர்க்கவேர்க்க உடல் மணம்எடுக்க நாம் துறவிநீராடுவதில்லை என்றதால் உடலில் அழுக்கு நிறைய நிற்பது சமணகுருமார், புததகுருமார் மஞ்சள் காவி ஆடையால் நெஞ்சை மறைத்துப் போர்ப்பவர்கள். இவர்கள் இருவரும் ஆரம்பர் என்று கூறிநுகின்றார். ஆரம்பர் என்று கூறிடுகின்ற போது ஆரவாரம் மிகுநதவர் தமது செயலை பிறர் அறிவதற்காக ஆடம்பரம் செய்பவர் என்பது பொருள். இதனை ஆராய்வோம்,

இந்தஉலகில் ஆரவாரம் பிறரை துயருறுத்தி தமது சமயத்தில் சேரும்படியாக வற்புறுத்தல் செய்யாதசமயமே சைவம் ஆனாலேநாம் பலவும் எமது பத்திரிகையிலசைவம் சிவசம்பந்த முடையது என விளக்கிக் காண்பித்தோம். சிவசம்பந்தம் என்றால் என்ன? என்பதை விளங்க வேண்டும். எமது சைவர்கள் தாம் செய்யும் வழிபாட்டை பிறர் அறியா வகைசெய்பவர் என்பதே உண்மை. இறைவன் கல்லால விருச்சத்தின் கீழ் இருந்து வேதம் அருளும்போது தம்மைம வழிபடுவோர் ஒழுகவேண்டிய நியதிகளையும சொலலி அருளி உள்ளார்! இநத ஒழுக்கம் இன்று நேற்றல்ல எத்தனையோ யுகங்களாக நடைபெற்று வருவன.

எமது வழிபாட்டை மெச்சற்காகச்செய்வது சைவத்தில் என்றுமே இல்லை. உதாரணமாக வழிபாட்டின் முடிவில் நான் வழிபட்டேன் எனும் பிழையையும் பொறுத்தருள் என்று கூறபபடுவது. இது அறிவுடைய அந்தணர் செயல், ஆனால் இன்று அந்தணர் பலர் காடைத்தனம் மிகுந்தவர் ஒலி பெருக்கியில் வழிபடுகின்றனர்! இதற்கு வி, என்னுவது என்பது எனக்கு விளங்கவில்லை.

எமது சமய வழிபாட்டில் ஆணவம் அகங்காரம் என்பன இருந்திருக்கவில்லை, நான் என்றவகை ஒருபோதும் உணர்விற்கு இன்பம் தராது, சிந்தை சிவத்டன் சம்பநதமாகாது எனவே அரும பாடுபட்டு பலவகைப் பொருள் தேடிச் செய்யும்வழிபாடு பிரயோசன மற்றுப் போகின்றது, பெருவாரி பணம் செலவழிப்பதால் இன்று மக்கள் பெறுகின்ற மனத்திருப்தி நாலு பேர் அறிய நாம் செய்து முடித்தோம் என்பதே யாகும். இந்த திருப்தி வழிபாட்டின் உண்மைப் பயனைத் தருமோ? அதை உணருங்கள். வழிபாட்டின் பயனைத்தருபவர் கடவுளாக இருப்ப அதைக்கேட்டுமகிழ்நத மக்கள் பயன் தரமுடியுமோ? இதை உணருங்கள்

அந்தணர்கள் சிறப்பைஉணர வருதால் "அயல் அறியா அந்தணர்" என்றவகை வழிபடுவார் என அந்தணரைச் சிறப்பிதது பெரியோர்கள் சொல்கின்றார். அதுவும் அல்லாது வேதமுறை தவறாது அர்சிபார்வியன் உலகில் பாத மலர் காண்பார்கள் பணிவார்கள் பிறவாரே என்றவகை யோக சுவாமிகள் கூறியருள்கின்றார்.

எனவே இதை தெளிவோம் என்றால் எல்லாவழிபாடும் வேதநெறிப்படி அமைய வேண்டும். வேத நெறிப்படி நடை பெறும் வழிபட்டைத்தரிசித்தால் பலன்தரும் என்பது எவர்க்கும் தெளிவுபெறும்.

வேதமுறையில விளம்பரம் ஆடம்பரம் பிறர் மதிப்பை விரும்பல் இவைவிலக்கப் பட்டுள்ளது.

ஒரு வழி பாட்டைப் புரிவோர் தமது தந்தை தாயை பெரியோர்களை அணைந்து ஆசிபெற்று வழிபடல் முறை. அதைவிடுத்து தவறான வழி நடந்து ஒலியைப் பெருக்கி வேடிக்கைகளுடன கலந்து ஊரவர் மெச்சிடச் செய்வதானால் அது மிகமிகத் தவறாகும், இதனை உணர்தால் ஒலி பெருக்கிடும் கோயில் சென்று வழிபடல் மிகும் பேதமையாகும். அது ஓர்பயனற்ற வழிபாடு. போய்க் கும்பிட்டு பயனில்லை.

அடுத்து சைவர்கள் உடம்பின் மேல் பாகத்தை சட்டையாலோ அல்லது போர்வை யாலோ மறைப்பதில்லை அப்படி மறைத்திடும் வழக்கம் இல்லாது தோளில் சால்வை உத்தரீயம் அணிவார்கள். நெஞ்சம் வெளியாகவே உள்ளது. நெஞ்சில் திருநீறு அணிந்து சந்தனக் குழம்பும் நிறையப் பூசுவது வழக்கம்.

பெண்களும் அப்படியே யாகும். இதனைச்சென்ற சுடர் தேவாரத்தில் சம்பந்த சுவாமிகள் முத்தின் தாழ்வடமும் சந்தனக்குழம்பும் திருநீறும் மெய் மார்பினில விளங்கப் பத்தி ஆர்கின்ற பாண்டிமாதேவி பணிசெய என்று அவர் பாடலில் தெரிவிக்கின்றார்.

இன்று நாட்டில் இதற்கு எதிர் மாறாக நமது சைவப் பெண்கள் அதுவும் குமர்ப்பெண்கள் விசேடமாக தமது அரையிலிருந்து கீழ்ப்பக்கம் முழுவதும் நிர்வாணக் கோலமாகவும் மேல்ப் பாகத்தில் ஒருசிறு சட்டையும் போட்டுப் பேயோ பசாசோ என்று ஆணோ பெண்ணோ என்று தெரியாதபடி மானம் மதிப்பு கௌரவம் அத்தனையும் இலாது மிருகங்கள் போல் தெருவில திரிவார்கள். இவர்களது கொள்கை இப்படியாகையில் நமது சைவப் பெண்கள் மேல்ப்பாகம் மறைப் பதில்லை என்றால் அதற்குச் சிரிப்பார்கள்.

பெண்களுடைய நிலையில் மானம் கற்பு அறிவு பதிவிரதம் உடைய பெண்கள் எப்பொழுதும் தமது மார்பிலிருந்து கீழ்க்கால்வரையும் சேலையால் மறைத்திட மானம் கற்புநெறியிலாத இவர்கள் அரையில் இருந்து பின்புறமும் வெளியாக்கத் தெந்யசேலையால் மறையாமல் இருப்பது இவர்களுடைய மனோநிலை எவ்வாறுஎனயாரும் புரிந்து கொள்ளலாம்.

அடுத்து பிராமணர்கள் ஒருபோதும் மேல்பாகத்தை சட்டையாலோ அல்லது சால்வையாலோ போர்த்து மறைப்பதில்லை. சுருங்கச் சொன்னால் பூநூலை அதர்கள் போர்த்து மறைக்கக் கூடாத என்பது பொது விதி.

பூநூல் அணிந்த பிராமணர் தனது பூநூலை சட்டையால் போர்த்து மறைப்பரே எனின் அப்படியான நிலையில் பிறர் ஒருவர் அவரைக் காணப்பெற்றால் கண்டவர்க்கு தோஷமாம். அதாவது ஓர் தீட்டுடைய வீட்டிற்கு சென்றவர் தனதுஇல்லம் சென்று நீராடுவது போன்று பூநூலை மறைத்த பிராமணரைக் கண்டால் நாம்சென்று நீராடவேண்டும், இப்படி ஸ்மிரிதிகள் கூறுவன.

பிராமணர்கள் ஏன் பூநூலை ஆடையால் மறைக்கக்கூடாது என்பது கேள்வி? பிராமணர்க்கு பூநூல் அறிவுக்கண் எனப்படும். நூல் அறிவைக் குறித்தது. இதனை உபநயனம் என்று சொல்லப் பெறும் உபஎன்றால் துணை என்பது பொருள். நயனம் என்றால் கண் என்பது பொருள் உலகில் கண்ணால் யாவற்றையும் பார்க்கிறோம். அதேபோன்று அறிவால் நல்லதை உணர்பவர் என்றதால் அதற்கும் நயனம் எனப்பட்டது. பூநூல் அணிவதை உபநயனச் சடங்கு என்று அழைப்பதை உணருங்கள்.

உலகில் தனது கண்ணை ஆடையால் மறைப்பவர் உண்டா? ஆடையால் மறைத்தால் பார்வை பின் என்னாகும்? ஆதலினாலே பூநூலை சட்டை மறைத்துடுரும் என்றால் அதுபெருந்தவறு. இதுஒரு சண்டாளத் தனம் ஆகவே சண்டாளரைக் கண்டால் தூயவாழ்வுடையோர் சென்று நீராட வேண்டியது பொதுவிதி. அதற்காக பூநூலை மறைக்கும் சண்டாளப் பிராமணரைக் கண்டால் நீராடல் சரிஎன்று உண்மை உணர்வார் ஏற்றுக் கொள்வார்.

அடுத்து நம்சைவமக்கள் ஏன் உடம்பின் மேல்பாகத்தைச் சட்டையால் மறைக்கக் கூடாது என்றால் அதற்குச் சட்டை அணிந்தால் நாம் ஆரம்பர் என்ற கருத்தில் அமைகின்றது. அதாவது வெளிப்பகட்டை விரும்புவார் என்பது தெரியப்படும் உளத் தூய்மையின் தெளிவு உடையவர் ஒருபோதும் தமது மார்பை மறைந்துக் கொள்ளார். எங்கள் சைவநெறியில் எம்பெருமையை உலகிற்குக் காட்டிக் கொடுக்கும் எல்லாஅலங்காரமும் ஆரம்பம் ஆடம்பரம் எனப்படும். யோக சுவாமிகள் தமது உடம்பைச் சட்டை போட்டு ஒருபோதும் மறைப்பதில்லை. சுவாமி ஒருக்கால் நுவரெலியாவுக்குச் சென்றது. சென்ற பெருமாற்கு யாரோ ஒரு அன்பர் சுவாமி அங்குள்ளகடும் குளிர் உடம்பைத்தாக்காது அணிவதற்கு ஓர் பிளானல்க் கம்பளிச்சட்டை கொடுத்தார். சுவாமி அதை வேண்டிக் கொண்டு இரவிலும் மேனியில் அணியவில்லை பதில் அதைத் தலையில் தலப்பாகை போல் சுற்றிக் கொண்டார். இப்படியாக சுவாமிகளுடன் நுவரெலியா சென்ற இராம சந்திரா என்றும் நவாலியைச் சேர்ந்த ஆசிரியர் பலஆண்டுகட்கு முன்னர் நம்மிடம்செய்தி தெரிவித்தார்.

இன்று தானும் பல சைவப்பெரியார்கள் மேனியை சட்டை யிட்டு மறைப்பதில்லை இவையாவும் நடைபெறும் செயல்கள். இதற் காகவே நாங்கள் கோயில் செல்லும்போதாதல் சட்டை அணியாது செல்வது வழக்கம்.

சாயிபாபா இராம கிஷ்ணமிசன் சாமிகள் இவர் போன்றவேறு பல சாமிகள் நீளச்சட்டை அணிவர் ஆனால் அவர்கள் சைவர்கள் எனஏற்க முடியாது. உலகில் பல்வேறு சமயங்கள்போல அவர்களுடையவழி வேறுவழி, அதை நாம் இங்கு குறிப்பிடவரவில்லை. எமது சைவ மார்க்கம் மிகுஅடக்க முடைய வெளிப்பகட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாத சமயம். ஊனினை ஒறுத்து உள்ளாக ஒளிபெருக்கும் சமயம் ஆதலால் எமது மார்க்கத்தில் சட்டை அணிதல் தகாது என பெரியோர் உணர்ந்தனர்,

நமது சைவநெறியில் துதிதான் முக்கியம் துதிவழி அல்லது சோதிப்பிரானும் பதிவழிகாட்டும் பகலவன் என்கின்றார் திருமூலர். இதுமட்டுமன்றி மாணிக்கவாசகரும் போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார் மீட்டு இங்கு வந்துவினைப்பிறவி சாராமே எனமொழிகின்றார். உபநிடதங்கள் ஞானப் பகுதியை உணர்த்தின எனினும் வழிபாடுடன் கலந்ததுதான் ஞானம் என்றும் வழிபாட்டின் மூலமே ஞானநிலையை அடையலாம் என்றும் கூறின ஆனதினாலே வழிபாடு சிறக்கவேண்டுமாயின் அதுக்குரிய நியதி இருக்க வேண்டும். இந்தநிலையில்தான் கோயில் வழிபாட்டில் தயவுசெய்து ஒலிபெருக்கியை நீக்குங்கள். அப்பாவனை கொடுமையில் கொடுமை பேதமையில் பேதமை என்றோம். காரணத்துடனே நாம் இதைக் காண்பிக்கின்றோம்.

கோவிலில் ஒலிபெருக்கிப் பாவனை மறத்தில் கொடிய மறம் என்று எங்கள் மக்கள் என்று உணர்வார்களோ அன்றுதான் சைவநெறியில் பீடித்த இருள் அகன்று உண்மை ஒளியின் பிரகாசம் பெறும் காலமாகும்.

ஒலிபெருக்கிப் பாவனை தீது என்று யாருடைய உள்ளம் உணரமுடியும் என்றால் நலம் நிறைந்த உள்ளத்தால் அது உணரமுடியும்.

சிலர் கேட்கலாம் பெருங் கூட்டம் நிரம்பிய இடங்களில் எவ்வாறு உரக்கத்தி கேட்கப் பண்ணுவது என்று? அதற்கு நாம் சொல்வது உங்கள் பேச்சைப் பாட்டை கேட்க வரும் மக்கள் செவிக்கு அளவாக உங்கள் ஒலியை பெருக்குங்கள் அதை விடுத்து கோயில் எல்லைக்கு அப்பால் இருக்கும் மக்கள் பலர் நோயுற்று இருப்பார் நீங்கள் பேசுவதை விரும்பாதவர் இருப்பார் அடுத்து தத்தம் இயல்பில் வழிபாடு செய்பவர் இருப்பவர் இவர்கள் அத்தனை பேருக்கும் பல கோண்களைப் பூட்டி நிலம் அதிர ஓசைபடுத்துதல் மிகு வேதனையாக இருக்கும். இது ஒருபோதும் கோயிலில் நடைபெறக் கூடாது. கோயில் கொடிய யுத்தகளமல்ல. அது சாந்தம் கருணையுடன் எல்லார்க்கும் இனிய அசைவுகளை வருவிக்கும் இடம்.

ஐயோ! இன்று இந்த சோயிலில் இருந்து வெளிவரும சத்தமும் யுத்த எல்லையில் முழங்கும் பீரங்கிகளும் அத்தனையும் ஒன்று, இதில் வேதனை தருவது என்ன என்றால் பல காவாலிப் பையன்களும் வேத நெறியோ தருமமோ ஏதும் விளங்காத பாவிப் பிராமணர்களும் இந்த ஒலிபெருக்கிப்பாவனை மூலம் செய்யும அநீதிகள் அளப்பில. அவற்றை சுட்டிக்காட்ட வேண்டிய நிலையை நாம் என்னென்று சொல்வது; ஐயோ கருணையின் பெருமை உடைய கடவுள் இருப்பிடத்தை இந்தக் காவாலிகளும் கொடிய பிராமணருமாகக் கூடி எல்லாரும் வீதி எல்லாம் கோண் கட்டி அலறச் செய்து அப்படிச் செய்வதால் தாம் பெருமை அடைந்து அதுவே சிறந்தது எனக் கொண்டாடுகிறார்கள். எத்தனை நக்கல் கதை எத்தனை வேடிக்கைக்கதை எத்தனை தூடண வார்த்தை எத்தனை சிரிப்பு எத்தனை அலங்கோலப் பாடல் இவ்வளவும் ஒலி பெருக்கியில் போட்டு செய்யும் கொடுமைக்கு அளவே இல்லை.

கோயில் என்றால் தலைவனுடைய இருப்பிடம் என்பது பொருள்! தலைவன்யார்? உலகை கருணையால் படைத்து சகல உயிரினமும் வாழ்வதற்கு மனச்சாந்தியுடன் வாழ்வதற்கு தத்தமது பழி பாவம் நீங்கி வாழ்வதற்கு அருள் புரியும் இடம்.

அப்படியான அந்த இடமே பல பழிபாவம் முதலியவை பெருக்குவதற்க்கு ஏற்ற இடமாக மாறினால் அதை கோயில் என்னலாமா? அது இருப்பதிலும் இல்லா திருப்பது எவ்வளவு நன்று சிந்தியுங்கள்.

நாம் ஏன்கோயில் செல்கிறோம் அங்கு சென்று வலம் வந்து வழிபட்டு எங்கள் பீடை பிணிகளைப் போக்குவதற்காகும், இறைவனுடைய இருப்பிடத்தை பலமுறை வலம்வருதல் பிரதட்சணம் செய்தல் இவைகள் உடலில் உற்ற பிணிகளையே சாந்தப் படுத்தும் என்பார்கள். அப்படியான கோவிலால் ஒலி பெருக்கும் பிணியை ஊர்மக்களுக்குச் செய்யலாமா?

நமது சைவமார்க்கத்தில் உடை உணவு ஒழுக்கம் இவ்வளவும் ஓர் சீரான கோட்பாட்டில் அமைய வேண்டி வந்தது யாது காரணம் என்றால் அநாதி படும் பொருளான சிவன் கல்லால விருட்சத்தின் கீழ் இருந்து அறம் சொன்ன வகையால் வந்தது.

உண்மையில் நாம் நமது கடவுள் சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டால் அவரால் அருளப்பெற்ற அறங்களை புறக்கணித்து வேறு கொள்கைகளை ஒழுக்கங்களை இடைப்புகுத்துவோமேயாக இருந்தால் நாம் நமது பெருமானை நிந்தனைசெய்கிறோம் என்றதே கருத்தாகும்.

ஒருபிதா சீலமுடன் வாழ்பவர் தனது மகனிடம் இப்படி நீ நடவென்றால் அப்பிள்ளை அப்படி அல்லாது வேறுவகை நடக்குமேயாகில் அதன் விளைவு என்ன? பிதாவை பிள்ளை மதிக்கவில்லை என்றதே கருத்து. பிள்ளை தனது சொல்லை ஏற்வில்லை மதிக்கவில்லை என்றதும் பிதாவின் மனோநிலை எவ்வாறாகும் சிந்தித்துப் பாருங்கள்? இதே போன்று தான் கல்லால விருட்சத்தின் கீழாகஅருளிச் செய்யப்பட்ட அறங்களை அவர் வழிவந்த நாம் பேணவில்லை அதன்படி ஒழுகவில்லை என்றால் எம் இறைவன் தருவுள்ளம் என்னாகும்? இதனையே திருநாவுக்கரசர் பொக்க மிக்கவர் பூவும் நீரும்கண்டு நக்கு நிற்பன் எனக் கூறுதலாகும்.

மகனே மாமிசம் புசியாதே மதுவுண்பாருடன் கூடாதே ஒழுங்காக நட என்று தன் பிள்ளைக்கு ஒருதகப்பன் கூறிட ஒரு பிள்ளை மதுவும் உண்டு மாமிசமும் புசித்துவிட்டு தனது இல்லத்திறந்த தந்தை காணும் படி அவரை தந்தை என்று சொல்லிக் கொண்டு கூட்டாளிகளுடன் வந்தால் தந்தை என் செயலாம்?

மக்கள் விரும்புவது அமைதியை அலறலை உரத்த ஓசையை ஒருவரும் விரும்பார். காது ஒரு ஓசையை ஒரு அளவிற்குத்தான் கேட்கும். அதற்கு மேலாக அந்த ஓசை பெற்றால் அந்தஓசையால் காது செவிடாகுதல் மட்டுமன்றி மனம் அமைதி பெற ஒருபோதும் அச்செயல் உதவாது,

கோவில் வழிபாட்டில் நாம் கடவுளை உணர்ந்து மனம் புலன்கள் எல்லாம் ஒருங்கி நிர்க்குணம் பூண்டு நம்மை மறந்திருத்தல்தான் உண்மை வழிபாடு. இன்று இதை எந்தக் கோயிலில் நாம் பெறக் கூடியதாக இருக்கின்றது. இதை உணர வேண்டியவர்கள் தங்களைப் பரமாச்சாரியார் சுவாமி என்று சொல்லிக் கொள்ளும் மடாதிபதிகள். மடாதிபதிகள் பிடாதிபதி என வந்தால் அவர் எப்படி இருப்பார்? திருக்கைலாய ஞான குருபரம்பரை என்று இந்தமடாதிபதிகள் தம்மைச்சொல்கிறார். ஞானபரம் பரையில் வருவார் ஞானமுடையவராக அல்லவோ இருக்கவேண்டும்.?

ஞானமுடையவர் எப்படி இருப்பார்? எப்படி நடப்பார்? அவருடை பண்பு என்ன? பிறர் வேதனைப்படும்படி ஒலிபெருக்கியில் உரக்கக்கத்துவது ஞானமா? அல்லது ஞான ஒழுக்கத்திற்கு உரிய நிலையா? தென் இந்தியாவில் உள்ள மடாதிபதியோ அல்லது இலங்கையில் உள்ள மடாதிபதிகளோ தம்பிரான்களோ ஞானபரம் பரையில் உள்ளவரா அன்று. இவர்கள் எல்லாம் கோயிலின் உயர்வை உணராத அஞ்ஞானிகள் சண்டாளர் எனலாகும்.

ஞானத்திரள் ... நல்ல அடியார்மேல் ஞானத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள் போலும் என்கின்றார் சம்பந்தப்பெருமான். அப்படியாக உருவம் ஒன்றுமிலாத கடவுளின் வடிவம் ஞானம் என்னப்பட்டது. ஆகவே ஞானம் என்பது அன்பு சொருபமானது.

அன்பிற்கு பிறர் வேதனைப்பட துன்பப்பட கருமம் செய்தல் பொருந்துமா? சுயநலம் மிகுந்து உலக போகங்கள் பலவற்றையும் அநுபவித்துக் கொண்டு நான் ஞானி என்று உலகை ஏமாற்றும் ஒலிபெருக்கிச் சாமியளே இதற்கு தயவுசெய்து பதில் தாருங்கள்.

சண்டாளன் என்பது ஒழுக்கக் கேடு மிகுந்தவனைக் குறித்தது. ஒருவரை நாம் சண்டாளன் என்று எதற்காகச் சொல்கிறோம்? ஓர் உயர்ந்த நெறியில் நின்றும் வழுவிய காரணத்தால் சொல்கின்றோம்? உயர்ந்த நெறிபுடயார் ஒழுக்கம் தவறிநடந்து கொள்வதற்காகவே சண்டாளப் பிரார்த்தனை என்று ஆலயங்களில் மிகப் புனிதமான செயல நடைபெறமுன் செய்யப்படுகிறது.

சண்டாளப் பிரார்த்தனையின் அர்த்தம் இத்தகைய தீயோருடைய தோஷம் கோவிலைப் பற்றியாதிருக்கவே செய்தலாகும், அதாவதுநலன் கெட்டவரின் செயல்களை நீக்கிடற்கும் நலன் கெட்டவர் நலன் பெறற்கு செய்யப்படும் சண்டாளப் பிரார்த்தனையின் தத்துவங்களின் உண்மை நிலையை உணராது இன்னமும ஒலி பெருக்கி முதல் பழி உடைய செயல்களால் கோயில் நலன்களை மாசு படுத்தலாமா?

கோயிலில் அறங்களைப் பேணி வழிபடுதலால் உண்மையான நல் நிலையை நாம் பெறலாகும். நித்திய வழிபாடு மெதுமெதுவாக நம்நெஞ்சைத் தூய்மை செய்து உயர்ந்த நெறியில் ஆக்கும், தருமத்தின் அடிப்படையில் முறைதவறாது வழிபட்டவரும் பெறற்கரிய பேற்றைப் பெற்றனர். கோயில் என்றதின் அர்த்தம் தலைவனது இருப்பிடம் என்பது பொருள். தலைவனுடைய செயல் நம்மை ஆண்டு பேரின்ப நிலையில் வைப்பதாகும். இதனை சிறிது சிந்திப் போம்.

எப்பொருளும் ஆக்குவான் ஈசன் எனக் கூறிய சேக்கிழார் எப்பொருளும் எனறதில் எப்பொருள் என்பது யாது எனக் கேட்டால் தனது அடியார்களைத் தானே ஆக்கிக் கொள்கின்றான் சிவன் என்றதை அப்பொருளதான் ஆளுடைய அடியார்கள் எனக் கூறிடுகிறார். ஆகவே தனது அடியார்களை வளர்க்கிறான் தானே உண்மை உணரச் செய்கிறான்: தானே தன்னால் அருளப்பெற்ற அறங்களை உணர்ந்து ஒழுகி மேல்நிலை அடையச் செய்கிறான, இதுவே உண்மை. இதனை மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் தாயே ஆகிவளர்த்தனை என்றும் என்னையும் ஒருவனாக்கி இருங்கழல் சென்னியில் வைத்த சேவக போற்றி என்றும் கூறுகின்றார்,

மாணிக்க வாசகரது கருத்தை உணரப்போனால் என்னையும் ஒரு மனிதனாக்கினாய்என்றது தெளிவாகிறது

ஓர் மனிதனாக சிறப் புறுதல் எப்படி?. ஒருவன் உலகில் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் மில்லாதவனாதல் என்று கூறலாகும்,

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் பெருமான் முருகக் கடவுள் உனை இந்த உலகில் தனித்து ஒரு பெருமை உடையவனாக இருந்திட அருள் புரிவார் என்றதை ஒருநீயாகத் தோன்றிடும் பெறல் அரும்பரிசில் நல்கிடும் என்கிறார்.

யோகசுவாமிகள் தனது உயர்ந்த நிலைமுருகன் திருவருளால் நிகழ்ந்தது என்பதை தையலார் மையலில் தான்மயங்கும் மாந்தர்காள் வையம் எல்லாம் ஆளமருந்துண்டே (அதற்காக) ஐயன்தாள் காலையொடு மாலை கடல்சேர் இலங்கையீர் சாலவே போற்றுவீர் என்கிறார். இதுவன்றி தமிழ் ... முழுவதையும் ஆறுமுகக்கடவுள் தாயைப்போலப் பரிந்து பாதுகாத்து நின்றார் என்பதை அன்னையைப் போல் ஆதரிக்கும் ஆறுமுகன் சந்நிதி என்று நல்லூர் மேல் பாடல் பாடி உள்ளார்.

இந்தக் கருத்துக்களை நம்சிந்தையில் கொண்டால் சிவன்அருள் செய்த அறங்களை எவ்வளவு அமைதியுடன் பேணவேண்டும் என்பது விளக்கமாகும். இதுவன்றி திருஞானசம்பந்தர் திருஅண்ணாமலை ஈசன்மேல் பாடிய இன்னுமொரு பதிகம் உளது. அது பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள் எனத் தொடங்குவதில் 8வது பாடலில் ஒரு சிறப்பு சொல்வார். அதன் கருத்து என்ன என்றால் தேவர்கள் சென்று சிவனை அண்டி இறைவா உனதுதிறம் யாது அருள் செய்க என்றலும் அப்போது எம்பிரான் அவர்கட்கு அறத்தைக் காண்பித்து இதுதான் எனது இயல்பு எனமொழிந் தருளியதாக அந்த வார்த்தையைச் சம்பந்தர் திறந்தான் காட்டி அருள்களென்று தேவர் அவர் வேண்ட அறந்தான் காட்டி அருளிச் செய்தார் அண்ணாமலையாரே என அப்பதிகத்து கூறியருளகின்றார். இந்த ஒரு வார்த்தையை யாதல் நமது பிராமணசமூகம் நம்பாதோ? உலக மக்கள் அனைவரும் இன்புற்றுவாழ இந்த உலகம் என்ன நிலையில் ஆக்கப்பட்டது?. சண்டாளனான திருஞானசம்பந்த மடாதிபதியே முதல் நீ சிந்தி! இந்த உலகம் நீ நாய் ஊளையிடுவதுபோல் ஒலிபெருக்கியில ஊளையிட்டு எத்தனை வழிபடும் மக்கள் மனதை சீர் குலைத்து வேதனை யுற வைத்து நோயுற்று தம் படுக்கையில் கிடப்பாரை தன் இல்லம் இலாது எழுந்து எங்காதல் அமைதியான இடம் தேடும்படி வைத்திடவா அறங்காட்டி அருள் செய்யப்பட்டது சண்டாளா பேதையே! நீசெய்வது சரியோ சிந்தித்துப்பார்? பலகாவாலிகள் அறம் தெரியாதவர்கள் கோவிலில் 10—15 என்று வீதி எல்லாம் ஒலிபெருக்கி கோர்ண் கட்டினால் பூநூலை அறுத் தெறிந்த பாவிப் பிராமணா நீ என்செய்கிறாய். குசாலா மேடை போட்டு பிரசங்கம் செய்வாய். கோயிலைக் கும்பிட்டுப் பழகாத பாவிகள் உன்பி ரசங்கத்திற்கு வருவார்கள்.

இல் என்ற பதத்தில் எழுந்த சொல் இல்லம் என்பதும் ஓர் அமைதியை விரும்புமிடமாகக் கருதப்படும், இல்லமென்பதும் கோயில் போன்று அங்கு நன்மையை நாம் உலகிற்கு புரிதற் காகவே என்பதை உணர வேண்டும். ஒரு இல்லத்தை சைவ நெறியில் நாம் உணர்வ தென்றால் அது ஒரு அறச்சாலை என்றே கந்த புராணம பேசுகின்றது. அறம் (தருமம்) தவத்திற்கு வித்தாவது. ஆகவே உண்மையில் அது ஒரு தவச் சாலையும் என்றே சொல்லலாம். இது சைவ மக்கள் நீளக்கொண்ட உண்மையாகும்.

சிலர் ஆச்சிரமங்க்கள் செய்து அதில்வாழ்ந்து ஏதோதாம் முனிவர் சாமி தபசி என்றெல்லாம் சொல்லி தபோவனம் ஆச்சிரமம் என்று பெயர்கள் வைத்திருக்கிறார். ஆனால் ஒருவருடைய வீடு(இல்லம்) தருமத்தின் அடிப்படையில் வாழ்வு அமையுமே என்றால் அந்த இல்லம் எல்லாம் ஆச்சிரமமே!

திருவள்ளுவர் ஓர் குறளில் இல்வாழ்வான் என்பான் தத்தமது இயல்பில் வழுவாது நின்றபிரமச்சாரிகள் (விரதிகள்) வானப்பிரஸ்த்திகள் சந்நியாசிகளுடைய தருமம் வளர்வதற்கு தாம் நல்லவழியில் ஒழுகி நின்றதலைவனாகும் என்கின்றார்.

ஆகவே ஓர் இல்லத் திருப்பவன் நல்ல நெறியைக் கடைப்பிடித்து ஒழுகும்போது அந்த தலைவன் ஒருபோதும் பிறர்க்கு இன்னாத செயலைச் செய்யமாட்டான். அதுதான் இல்லச் சிறப்பு. இல்லத்திருந்து வெளிவரும் ஓசை அயல வரைத் துன்புறுத்தும் வகை அமைந்தால் நாம் அதனை எவ்வாறுகருதலாம்?

ஆதலினால் உண்மையாக கோவிலின் நலம் இல்லத்தின் நலம் எல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவற்றையும் ஒலிபெருக்கும் பாவனை கெடுத்துக் கொண்டிருக்கிறது. இதைஇன்று தருமத்தை விளங்க வேண்டிய சண்டாளப் பிராமணன் உணரத் தவறிவிட்டான். அவன் தனது தொழிலை தற்புகழ் சிக்கும் மேம்பாட்டிற்கும் ஆடம்பரத்திற்கும் பாவிக்கத் தொடங்கி அதன் மூலம் பணம் பெருக்கலே தனது ஆசையாகக் கொண்டான். இந்த ஆசைப் பாட்டை மதம்பிடித்த யானையின் மதவெறிக்கு ஒப்பிட்டுப் பேசுகிறுர் மாணிக்கவாசகர், மிகநன்ருக இந்த உலகில் வாழும் மக்களை உணர்ந்து அவர்களது மனோநிலையில் வைத்து அந்த நிலையின்றி மேலோங்கவேண்டிய தன்மையில்த்தான் தெய்வநிலை வருமென்பதை பித்த உலகர் பெரும் துறைப் பரப்பினுள் மத்தக் களிறு எனும் அவாவிடைப் பிழைத்தும் என்கின்றுர்.

இநீத நிலையில் தருமம் நீங்கி பிற உயிர்க்குத் துன்பம் செய்து வாழ்வதை விரும்பும் மனிதர் உண்மையில் விசரரே! சிலரால் அவர்கள் தம்மை புத்திசாலிகள் என நினைக்கலாம். ஆனுல் உண்மையில் அத்தகையோர் புத்திசாலிகள் அன்று. ஆகையால் உலகெங்கும் மக்களிடம் அவாஞ்சை பொய குரோதம் வஞ்சனை இவை நிரம்பப்பெற்று அதனுலேலேயாம் கீழ்மைப் படும் நிலையை மாணிக்க வாசகர் நோக்கிய படியால் பித்த உலகர் என உலகமக்களைச் சொன்னுர். அதுவே உலகெங்கும் நிரம்பி வழிதலால் பெருந்துறைப் பரப்பு என்றுர். அடுத்து அவர்களிடம் கொண்ட அவாவைக் கூறுகின்றபோதுதான் மத்தக்களிறு எனும் அவா என்கின்றுர். இதற்குள்ளால் தப்பிப் பிழைப்பது என்ருல் இதுமிக கடினம்.

ஏனெனில் மதம்பிடித்த யானை தன் உற்சாகத்தில் எத்தனை பேரையும் கொல்லும் எத்தனை பேரையும் அடிக்கும் வீடுவாசல் அதுஇது எல்லாம் துகளாக்கும். அதற்கு ஆருடையநலன் பற்றியோ சிந்தயாது. இந்த மதம் பிடித்த யானை வேகமுடன் வந்தால் அதற்குத் தப்பிழைத்தல் அரிது.

இதே போன்றதுவே ஒலிபெருக்கும் மக்கள் கொள்ளும் அவா! ஒலிபெருக்கி பாவித் தன் செயலை பிறர் அறியக்காட்டவிரும்பும் அவர்களது அவாவும் அதேதன்மையான மதம் பிடித்த யானையின் நிலையாகும்.

இவர்கள் இன்று இதன்மூலம் செய்திடும் அநீதிகள் அளவிலபல. அந்தணர் ஒழுக்கம் குன்றிய காரணமும் கோயிலில் ஒலிபெருக்கிப் பாவனை வந்த பிற்பாடேயாகும்.

ஒலிபெருக்கிப் பாவனையில் ஈடுபடும் இளைஞர்கள் என்றே ஒருநாளாதல் கோயில் வலம் வந்து கும்பிட்டு இருக்கமாட்டார். அவர் கோயிலில் செய்யும் கீழ்மைத் தனங்கள் அளப்பில. கோவிலை மதிப்பதில்லை. கூடி இருந்து கும்மாளம் போட்டு வேடிக்கை செய்து சிலர் வீதி சிகரட் இவை கூட பிடித்துக் கொண்டு பெரும் அபசாரம் கோயிலில் கூசாது செய்கின்றனர். இவர்கள் கோயிலிற்கு வந்த காரணம் ஒலிபெருக்கும் விண்ணுணத்தைக் காட்டவன்றி வேறிலலை.

சில கோயில்களில் இந்த இளைஞர் சாரம் சேட்டு கரடி புலி குதிரை போன்ற சடையுடன் காணப்பட ஐயோர் இதுகள் இந்த ஒரு வீணுன ஒலிபெருக்கி அநீதியாலே தான் இங்கு வருகதுகள். சண்டாளப் பிராமணனும் தங்கள் செயல் எத்தனை பழுதுடன் இருந்தாலும் ஒரு ஒலிபெருக்கி பிடித்துப் பாடி சத்தம் போட்டு காட்டி ஆரவாரத்தை விரும்பும் உபய காரராகும் பஞ்சமா பாதகரில் மிஞ்சிய பாதகரும் செய்துவைக்கும் இந்த அநீதியான ஆரவாரத்தின் முடிவு சோயிலின் நலத்தை கெடுத்து கோயிலை கீழ் மக்கள் வசம் ஒப்பு வித்து விடுகின்றதுது.

அந்தோ ஒலிபெருக்கிப் பாவனையால் எல்லாக் கோயிலின் புனிதங்களும கெட்டன. சாந்தி குலைந்தது ஞானநெறிகள் பங்கப்பட்டன என வே கோயிலால் அருள் அகன்றது. அருள் அகல இருள் பெருகியது.

இருள் பெருக கோயில் சுற்றடலில் வாழும் மக்களின் உள்ளங்களும் இருளாகியது. இதனுலே தரும சிந்தை பிற உயிர்க்கு இரக்கம் தவம் இவையாவும் அற்றன.

நாட்டில் வழிப்பறி கொள்ளை களவு கொலை காமம் கொலை செய்தாலும் மிருக வெறியுடன் கொலை செய்தல் இவைகள் பெருகிக் கொண்டது. தந்தை தாயை பிள்ளைகள் மதிப்பதில்லை. பெரியோரை மதிப்பதில்லை; பெண்கள் ஆண்களை மதிப்பதில்லை. இளைஞர் சமுதாயம் சைவ நெறிக்குரிய நலன்கள் நாள்தோறும் குன்றி இன்னும் சிறிது நாட்களில் சைவம் என்னும் புனித முடைய சமயம் நீங்கி வேறுஒரு வகையான சமயம் வரும் நிலை வந்துள்து. உயர்வான நெறிகள் நாட்டால் அகன்று கொண்டிருக்கின்றன,

இன்று பல உத்தமர்கள் கோயில் போய் கும்பிடுவதை நிறுத்திக் கொண்டனர். இதனுலே நெறி கெட தமிழ் இனம் இன்னும் அல்லல்ப் படுகின்றது. நாம் கோயிலில் இறைவனது சீலங்களை அறங்களை மதியாது ஒலிபெருக்சி மின் ஒளி முதல் பல இயநதிரங்களை பாவித்து நடத்தல் மிகு பாதகமாகும்.

ஆதலால் தமிழர்களாகிய நாம் நம் முன்னோர்கள் என்றும் அனுபவியாத துன்பத்தை அடிக்கடி தொடரும் இனக்கலவரம் மூலம் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். ஒலிபெருக்கி மூலம் எழுகின்ற அமைதியில் அவலச்சத்தமே நாட்டிற்கு பெரும் அபசகுனமாகும். இந்த அவலச்சத்தம் கோயிலிருந்து எழுந்துணையும் நாட்டில் துன்பதுயரமும் இனக்கலவரமும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். சில வீணரது வேடிக்கையால் விழாவால் நாடு துயரப்பட ஏதுவாதல் நன்றல்ல. சைவ மக்களது வழிபாடுகளில் ஆரவாரம் இல்லையயன் பதை கீழே வரும் தேவாரம் விளக்குகிறது.

திருச்சிற்றம்பலம்

## உண்ணுமுலை உமையாளொடும் உடனுகிய வொருவன்
## பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
## மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ அதிரும்
## அண்ணுமலை தொழுவார்வினை வழுவாவண்ணம் அறுமே

1 ஒரு பிள்ளை தனது வாய் வைத்து உண்ணுத முலையுடைய உமையம்மையாருடன் கூடி தான் ஒருவனுகிய இறைவன் பெண் வடிவும் தனது அருளேயாகும் தான் ஆகிய பெருமான் மலையில் திருவுடைய இரத்தினங்கள் ஒளி திகழ மண் ஆர்த்திட இரைந்து ஓடும் அருவித் திரள்கள் சிறு ஓசைதரும் முரசப்பறை போல அதிர்கின்ற சிறப்புடைய திரு அண்ணுமலையைத் தொழுவார்கள் வினைகள் வழுவி தவறி ஓடிடாதபடி அறுந்தே போகும்.

உண்ணுமுலை என்றது ஒரு குழந்தை வாய் வைத்து உண்ணுத படி என்றவாறு. திருவண்ணு மலையில் அம்பாள் உண்ணு முலை எனும் நாமமுடன் தனிச் சிறப்புடையவள். அவளைத்தான் முன்னுக அடியார் வணங்குவர். அவளது தனங்கள் பருத்தன. அபர ஞானம் பரஞானம் ஆவன. போகம் நிறைந்த தனவகளுமாம். உலகில் நிறையும் ஞானம் முதல் போகங்கள் அனைத்தும் அவள் முலைகள் சுரந்து நிற்பன வாதலின் உண்ணு முலை எனப்பட்டது. போக மார்த்த பூண் முலையாள் அவளோடும் என பிறிதோர் பதிகத்து சம்பந்தர் கூறுகின்றுர்.

அருவிகள் மழலை முழவு அதிர்தல் என்று அதன் இரைச்சல் இனிதாக இருந்தமை குறித்தார். வினை வழுவாது அறும் என்றமை தொழுவார் வினைகள் தற்காலிகமாக நீங்கிடாது. அதாவது தரிசித்திடும் அன்று மட்டும் நீங்காது தொழுதிடும் அன்று வரையும் பிடித்த வினைகள் முற்றாக அறும் என்றவாறு.

## தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
## தூமாமழை துறுவல்மிசை சிறுநுண்துளி சிதற
## ஆமாம்பிணை அணையும்பொழில் அண்ணுமலை அண்ணல்
## பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை இலரே.

2 - இனிய தேமாவின் கனிகளை ஆண் குரங்கு பெற்றுக் கொள்ள அக்கனிகள் விட்டு விழும் கொம்பர்கள் நனையுமாறு தீண்டியதில் பெய்யும் பெரு மழையின் துளிகள் நின்று தெறித்திடும் சிறிய நுண்ணிய சிறு துளிகள் சிதறிட அழகிய ஆண் மானும பெண் மானும் அணைகின்ற சிறந்த சோலை சூழ்ந்த அண்ணு மலையில் அமர்ந்த பெருமானின் பூவின்மிருதுவாய சிலம்பணிந்த திருவடிகளை நினைவார் வினை இலரே.

மழை பெய்யும் வேகத்தில் பெரும் துளிகள் பெய்தலால் அத் துளிகள் தேமா மரத்தின் கொம்பரில் படும் விசையில் அதல் இருந்த கனிகள் கழன்று விழுந்து கீழ் இருந்த ஆண் குரங்கு பெறும் படியாயிற்று அப் பெரும் துளிகள் சிறிய நுண் துளிகள் சிதறின. அந்த மான் பிணைகள் அணைதற்கு மறைப்பிடமாகும் சோலை எனக் கொண்டன போலும். அத்தகைய சோலை சூழ் அண்ணுமலை அண்ணல் என்றது ஐயன் கருணை காட்டியவாறு.

இக் கருணையின் வடிவுடைய கடவுளை நினைவார் வினை இலர் என்றவாறு. வினை இலர்தான் நினைக்கவும் வல்லவர் என்றதும் குறிப்பாவது.

## பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
## சூலிம்மணி தரைமேல்நிறை சொரியும்விரி சாரல்
## ஆலிம்மழை தவழும்பொழில் அண்ணுமலை அண்ணல்
## காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே.

3 ; தோகையுடை மயில் தன்பேடுடன் உறைகின்ற சோலையாகும் மூங்கில் மரங்கள் சொரிந்த முத்துக்கள் ஒளி உடைய மணிகள் நிலம் எங்கும் நிறை

## வேத நெயுடன் நிகழ வேண்டிய கும்பாபிசேகம்
### விளக்கமிலாத பிராமணர் செயலால் வெருளிக்கூத்தாகின்றது

கும்பாபிசேகம் என்ருல் என்ன? இதற்கு முதல் விளக்கம் வேண்டும், இதை ஒருவர் தாம் ஒரு கோவிலுக்கு கருமத்தை செய்யும் போது அக்கருமத்தை ஏன் செய்கிறேன்? இது எப்படிச் செய்தல்வேண்டும்? இதைச் செய்வதால் என்ன பலன் பெறலாம் அந்தப் பலனைப் பெறுவதற்கு எப்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்? என்றதை எல்லாம் செய்வாரும் செய்விப்பாரும்நன்கு உணர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும். நமதுசைவ மக்களாம் முன்னைப்பெரியோர் கோயில் கருமம் புரியும்போது எவ்வளவு நிதானத்துடன் பயபத்தியுடன் நடந்து கொடார் என்பதை சைவ நூல்களில் தலை சிறந்த பெரியபுராணம் சொல்கிறது.

பொங்கும் மா மறைப் புற்றில் இடங்கொண்டவர் எங்கும் தானுகிய ஈசற்கு உற்ற பூசனைகட்கு அங்கு வேண்டிய திரவியம் நடைமுறைகள் முதல் பலவற்றையும் அறிந்து திருவாரூர் கோவிலை பரிபாலம் செய்திட சோழ அரசன் ஆகமம் சொன்ன வழியை தான் நன்கு ஆராய்ந்து உணாந்தபின் நன்கு பரி பாலித்தான். அந்தவகை ஒழுகி சிவன நேரில் காட்சி கொடுக்கும் ஒரு பேற்றையும் பெற்ருன் என்று பெரிய புராணம் சொல்கிறது

நம்பிக்கை உண்டாகில் தும்பிக்கை துணைசெய்யும் என பெரியோர் வாக்கியம் சொல்வார். நம்பிக்கை என்ருல் எதில் நம்பிக்கை தெய்வத்தில் வேதங்களில் ஆகம முறைகளில் கடவுள் அருளில் நம்பிக்கை என்றதே உண்மை. இதுவன்றி நமபிக்கை என்ருல் வேறு கோமாளித்தனம் வேடிக்கை பொய் புரளி என்றவகை பொருள் படாது.

எல்லாரும் நாம் கும்பம் வைக்கிறோம். வீட்டில் திவசம் சடங்கு வேறுகிரியை இவற்றிற்கும் கும்பம் வைக்கிறோம், நிறைகுடம் என்பது கும்பம் எனப்படுகின்றது. ஆனுல் கோயிலில் பிரதிட்டை அதாவது ஒரு விக்கிரகத் ல் கடவுளை எழுந்தருளப் பண்ண கும்பம் வைக்கப் படுகின்றது.

இந்தக்கும்பம் விக்கிரகத்தில் உயிரினைக் கொடுத்து அந்த மூர்த்தியை அருளுடையதாக்க உதவும் கருப் போல்வது. ஒரு கரு ஓர் உயிர் தோன்றுவதற்கு எவ்வாறு அமைகின்றதோ அவ்வாறுகிய தன்மையில் கும்பாபிசேகத்தின் பிரதான கும்பம் அமைகின்றது, ஆனதினுல் இதை எவ்வளவு பக்குவமுடன் பேணவேண்டும். இதை விழாவிற்குரியதாக வேடிக்கைக்குரியதாக ஆக்கலாமோ? சிந்தியுங்கள். ஆகவே மங்கல கலசம் கடவுட்தன்மை கொண்டது உயிர்த்தன்மை உடையது என்று பெரியோர் சொல்வர். இந்தவகை கும்பத்தை நிறுத்துவதற்கு தகுதிவாய்ந்த அந்தணரை மந்திர யோகர் என்று சொல்கின்றது பெரிய புராணம். மந்திர யோகர் என்ருல் யார்? நித்தலும் வேத அத்தியயனம் செய்பவராய் தூயஒழுக்க முடையவராய் மூவாசைகளையும் கட்டுப்படுத்தி உள்ளவராய் இருப்பவரே மந்தர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுர்படி சொரியும் விரிந்த சாரல்கள் உடையதாய் பெருக்கச் சொரியும் கருவுடைய மேகங்கள் தவழும் சோலையுடைய அண்ணுமலை அண்ணலின் இயமனுடைய வலியை தொலைவித்த சிவந்த திருவடிகள் தொழுவார் அவர்களைச் சார்வதே புகழ்.

புகழ்ச்சி என்பது தொழுவாரை அடையும் என்றபடி. ஊர் மெச்சும் புகழ் என்றதல்லாது உள்ளம் நிறையும் புகழ் என்றதும் குறிப்பாக நிற்கின்றது.

ஊரவர் மெச்சும் புகழிலும் தன்னைத் தான் மெச்சும் புகழ் மேலாயது. இதற்குச் சான்றாக என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என பிறிதோர் பதிகந்து மொழிகின்றார். பெற்றதார் பெறுகிற்பார் என சுந்தரர் தம்மை வியக்கின்றார். வந்த பிறப்பை வணங்குவோம் என சேக்கிழார் கூறுகின்றார். என்னெப்பாரின்றி இருந்தேன் என யோக சுவாமிகள் கூறுகின்றார். இவை எல்லாம் ஊரவர் சொல்லும் புகழாகாது. உள்ளம் நிறைந்த புகழ் என்றவாறு. தொழுவார் பெறும் இன்பப் பெருக்கினை குறித்தவாறு.

**உதிரும்மயி ரிடுவெண்டலை கலனுவுல கெல்லாம்**
**எதிரும்பலி உணலாகவும் எருதேறுவ தல்லால்**
**முதிருஞ்சடை இளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்**
**அதிருங்கழல் அடிகட்கிடம் அண்ணுமலை யதுவே.**

4. உதிர்கின்ற மயிர் விட்ட வெள்ளை மண்டை ஓடு பிச்சைப் பாத்திரமாக உலகமெல்லாம் தாமாக வந்து சேர்கின்ற பலி தமக்கு உணவாகுவதுடன் எருது ஏறிக் கொள்வதல்லாது முதிர்ந்த திருச்சடையின் முடிமேல் இளமையான வெண்கீற்றுப் பிறை அணிந்து கொண்டு திருப்பாத மீது அதிர்கின்ற சிலம்பணிந்த குருபரனுய கடவுட்கு இடம் திரு அண்ணுமலை அதுவாகும்.

மயிர் கொண்ட தலை மயிர் உதிர்த்தபடியால் வெண்தலையாயது. அதை நீட்டும் தோறும் இடப்படும் பிச்சை இயல்பில் வருவதாக அதை ஏற்றுக் கொள்வதன்றி விரும்பிய பொருள் கேட்டு வாங்காதபடி என்றதால் எதிரும் பலி என்கின்றார். பிச்சையுடன் எருது ஏறுவதல்லாமல் இன்னமும் முதிரும் சடை முடிமேல் பிறை என்றது எத்தனையோ ஊழிகளைக்காண நின்றதால் அச் சடை முதிர்வாயிற்று, அடிகள் என்றது குருவாக வந்து அருள்புரியும் கருணை உணர்த்தினார். பிறப்பு இறப்பு இல்லாது உருவமும் இல்லாதார் தலையளி செய்திடக் கொண்ட உருவம் குருவடிவம் ஆதலின் அதிரும் கழல் அடிகள் என்றவாறு.

**மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி**
**அரவஞ்செய முரவம்படும் அண்ணுமலை அண்ணல்**
**உரவஞ்சடை உலவும்புனல் உடனுவதும் ஓரார்**
**குரவங்கமழ் நறுமென்குழல் உமைபுல்குதல் குணமே.**

5. மரம்செறிந்த மலையில் விளையும் முத்துக்கள் பெருவாரி இரத்தினங்கள் சிந்த உருண்டோடிவரும் வெள்ளை நீர் அருவிகள் ஓசை செய்ய அதனுல் என்றும் பெருந்தம் திரு அண்ணுமலை வாழும் அண்ணல் உரமுடைய சடை மீது உலவுகின்ற நீராய கங்கை (பெண்) தமது உடனுக என்றுமே தங்கி இருப்பதையும் உணராதவராகி அல்லது நினையாதவராகி குராமலரின் வாசனை கமழ்கின்ற கூந்தல் உடைய உண்ணுமலை உமையம்மையாரை அணைந்து சேர்ந்து கொள்ளுதல் அவரின் குணமாயது.

தனது சடைமீது கங்கை என்னும் பெண்ணை உடன் என்றும் வைத்தும் இன்னும் ஒரு பெண் உமையை நீர் அணைதல் குணமாயதே என்கின்றார். சடைமீது நீராய பெண்ணைச் சேரவைத்தீர்! ஆதலின் உமது சித்தம் என்றும் குளிரும். இதை விடுத்து இதன் மேலாக போகங்களின் ஞானத்தின் அருள் முதல்வியைத் தழுவுகின்றீரே, அது எக் காரணமோ? எனக் கேட்டவாறு. கருணை போதாதென்று மீண்டும் கருணையே பெருக்குவீர் உமது குணம் போலும் என்கின்றார். கருணையின் பெருமை கண்டேன் காணக என்பது திருவாசகம்.

**பெருகும்புனல் அண்ணுமலை பிறைசேர்கடல் நஞ்சைப்**
**பருகுந்தனை துணிவார்பொடி அணிவாரது பருகிக்**
**கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி**
**உருகும்மனம் உடையார்தமக் குறுநோயடை யாவே.**

6. பெருகும் நீர்வளமுடைய அண்ணுமலையில் இருப்பவர் பிறை சேர்ந்த கடலில் எழுந்த நஞ்சினைப் பருகும்படி துணிந்து கொள்பவர். பொடியாகும் நீறு அணிவர். அந்த நஞ்சை உண்டு அதனுல் கருகிய கண்டம் உடையவர். பூவசனை கமழும் சடை உடையவர், அவர் திருவடிகளைப் போற்றி செய்து உருகும் மனமுடைய அடியார்க்கு வரஇருக்கும் நோயும் வந்தடையாது.

நஞ்சை உண்பது துணிவார் என்பது மூன்று காலமும் பொருந்துவ தொன்றாகும். இதனுலே செய்வினை வந்து எமை தீண்டப் பெருது திருநீலகண்டம் என்று முன்னர் பாடியவாறாகும். அடியார்கள் அவர் திருவடி பரவி உருகுவாரெனின் அவர்க்கு ஊழ்வினை வசத்தால் வரவிருக்கும நோயும் வராது என்றபடி.

**கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்**
**நரியாடிய நகுவெண்டலை உதையுண்டவை யுருள**
**அரியாடிய இறைவர்க்கிடம் இனவண்டிசை முரலே**
**எரியாடிய கண்ணுளொடும் அண்ணுமலை அதுவே**

7. கறுத்த கால் உடையன பிணங்களின் குடல் கொத்தி உன்பணவான கழுகுகள் பிணம் தின்று வெறியாடிய சுடுகாட்டில் நரி பிணம் தின்று வெறி மிகுந்து வேளை உருட்டி ஆடிட சிரித்திடும் முறுவல் தோன்றும் வெள்ளைத் தலை உதைபட்டு அத்தலைகள் உருண்டிட அழகிய திருக்கையில் அனல் ஏந்தி ஆடிடும் எம் பெருமானுர்க் கிடம இசை பாடும் வண்டுகள் ஓசை படப் பாடிடும் ஓசையே என்றும் மிகுந்ததாய்; வரிகள் உடைய திருக்கண் கொண்ட உமையம்மையாருடன் எம்பெருமான் கூடி இருந்தருளுகின்ற திரு அண்ணுமலை அதுவே.

சுடுகாட்டில் ஆடிடும் அற்புதம் பேசினர். அவ்வாறுயினும் உண்ணுமுலை உமையுடன் அண்ணுமலையில் அமையும் சிறப்பும் ஓதுகின்றார். கழுகுகளின் குணமும் நிறமும் பேசப்படுகின்றது. பிணங்களின் குடல் கொத்தி அவற்றைத் தின்று கழுகுகள் ஆட்டம் கொண்டன. நரிகளும் பிணங்களின் தலையைக் கடித்துத் தின்றதும் தசை நீங்கிய தலை பல் தோன்றலின் அத்தலை நரியின் செயலைப் பார்த்துச்சிரிப்பது போலாதலின் நகுவெண்தலை எனக.

யோகர் எனப்படுவர். ஏனெனில் மந்திரம் ஓதிவிதிப்படி ஒழுகி வருவார் ஒருவரால் தான் ஒரு கும்பத்தில் கடவுளை ஆவாகனம் செய்திடலாம். மங்கல கலசத்தை அமங்கலமான செயல்களுடன் கலந்து நெறியற்றவகை அதன்முன் நடக்கத் தொடங்கினல் அதை கோமாளிக் கூத்து என்றே நாம் சொல்வோம். கூத்துமேடையில் கும்பாபிசேகம் ஓர் காட்சி அங்கமாக அமைந்தால் அது எப்படியோ அப்படித்தான் கோமாளித்தனம் உடைய கும்பாபிசேகம்.

இந்த வகையாக கும்பாபிசேக கும்பம் கடவுளாக யாகமண்டபமும் அதறகு அருள் பெருக்கும் ஓர் இடமாக அமைகின்றது. வேதிகைகள் குண்டங்கள் அக்கினி சுருக்கு சுருவம் வாகீஸ்வர வாகீஸ்வரி ஆவகனம் பஞ்ச பாத்திரதூய்மை அந்தணர் ஒழுக்கம் முதல் பலவும் ஓர் கடவுள் முன் எப்படி நிகழவேண்டும்? சிந்தியுங்கள்!. அதில் ஒன்றை முதல் சிந்தித்தால் ஏனைய பற்றி நாம் விரிவாக விளக்கவேண்டியதில்லை.

சாதாரண நிலையில் ஓர் கும்பத்து கடவுளை எழுந்தருளப் பண்ணிடல் ஓர் தாய் வயிற்றில் நின்றும் ஓர் குழந்தை உற்பவித்தல் போலாகும். ஓர் குழந்தை பிரசவிக்கும்போது தாயும் குழந்தையும துக்கசாகரத் துயரிடை இருப்பார் என மாணிக்கவாசகர் கூறிடுகின்றார். இதையும் சிந்தித்துப் பாருங்கள்.

துக்க சாகரம் என்றால் அக்குழந்தையைப் பெறும் தாயின் பிரசவ வேதனை அல்லது நோக்காடு எனப்படும். பிரசவ வேதனையிலாது ஒரு தாயும எந்தக் குழந்தையையும் பெறமுடியாது. இதைவிடுத்து ஒரு பெண் வேதனையில்லாமல ஒரு குழந்தையைப் பெற முடியுமானுல் அது உயிரற்ற வெறும் பாவையேயாகும்.

இதை நினைந்துகொண்டால் ஒரு கும்பத்தில் ஆண்டவனை வரப்பண்ணுதலும் இதே தன்மையான வேதனை மூலம்தான் என்பதை உணரவேண்டும். இந்த வேதனை மந்திர யோகர்களுக்கு அவர்களது சீலமுடைய ஒழுக்கமாகும். தருமம் தயை உண்மை பேசல் புலன்களை அடக்கல் சிவோகம்பாவனை சிவத்தியானம் அவாவின்மை இவையாய சில ஒழுக்கங்களை ஓர் அந்தணர் கடைப்பிடித்து ஒழுதுவதெனில் அது பிரசவ வேதனையை விட மிக்கவேதனையாகும், திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் பெருமான் முருகக்கடவுள் எங்கு எழுந்தருளி இருப்பர் என கூறும்பொழுது "தாவு இல் கொள்கைத் தந்தொழில் முடிமார் மனம் நேர்பு எழுதருவாள்நிற முகனே" என்கின்றார். இதன் கருத்து தாங்கள் மேற்கொண்ட சில ஒழுக்கங்களினலே தமது உடம்பு வருத்தமுறினும் அதை எண்ணுது தமது சீலமுடைய தவநெறியை கைவிடாது ஒழுகுகின்ற பெரியோர்களது மனதில் தோன்றி பிரகாசிக்கின்ற ஆறு திருமுகங்களென திருமுருகாற்றுப்படைக்கு உரை கண்ட ஆசிரியர்கள் கூறுகின்றனர். எனவே தன்னிடத்தில் கடவுளைப் பெறுவதற்குப் தூய ஒழுக்கம் அவசியம். தன்னிடத்தில் கடவுளைப் பெறக்கூடியவர்தான் கும்பத்திலும் வரவழைக்கலாம்.

ஆகவே ஒழுக்கமில்லாத பிராமணன் கட்டுப்பாடில்லாது கண்டபடி நடக்கும் பிராமணன் காமம் குரோதம் கோபம் முதலிய பாபச்செயல்களில் ஈடுபடும் பிராமணன் தன்னிடத்தில் ஆண்டவனை வரவழைக்க முடியாது. குருக்களின் கோலம் வடிவாக இருக்கலாம் பேச்சு நல்லாயிருக்கலாம், கோலாகலமாக வரவேற்கலாம். கொமிசனுக்கு பேச்சு ஆடல் பாடல் ஒழுங்கு செய்யலாம். ஆனல் இத்தகையோர் பிரதான கும்பத்தில் கடவுளை வரவழைககமாட்டார். ஒலிபெருக்கியில் ஊருக்கு பேசிக்காட்டி மந்திரம் சொல்லிக்காட்டி பெருவாரி பணம் செலவழித்து வேடிக்கைகள் விநோதங்கள் செய்துகாட்டி கும்பாபிசேகம் செய்யலாம், ஆனல் இவைகளால் பிரதான கும்பத்தில் கடவுளை வரவழைக்க முடியாது.

ஒரு குழந்தை பிரசவிக்கும் போது தாய் கண்டபடி நடக்கலாமா? ஆடிப்பாடி விளையாடலாமா? நிறைய உணவு உண்டு மகிழலாமா? இதைச் சிந்தித்தால் கும்பத்தில் கடவுளை வருவிப்பவர் எப்படி இருக்க வேண்டும்? முப்பத்திமூன்று குண்டம்போட்டு அதற்குரிய ஒழுங்கிலாவகை ஏமாற்றும் கோமாளி களே சண்டாளரே நீங்கள் பல பெணகள் கும்பிட வருவாரை கற்பழிப்பது போன்றதா ஓர் பிள்ளை பிறப்பது? அல்லது கடவுளை கும்பத்தில் எழுந்தருளச் செய்வது? பாதகப் பிராமணனே உனது ஏமற்று வித்தையை நீ திமூலம் விளககிக் காட்டு? அல்லது உனது பூநூலை அறுத்தெறிந்துவிட்டு மரம்ஏறிக் கள்ளுச்சீவு!. நீ உனது பழியை சரியென பல மனிதர்க்கும் ராஜ புஸ்பம் சொரிந்து பஞ்சாலாத்தி காட்டி நலலவன் என நடிக்கலாம். சண்டாளனே! ஏமாற்றுப் பிராமணு! நாயே உன் நிலயை என் என்று சொல்கிறது!. உனது ஏமாற்று வித்தையால் கோயிலில் கடவுள் வரவில்லையே! எனவே கோயிலில் அருள் இல்லாது போவதை நீ உணரப்போவவன் அன்று, ஏனெனில் பொருள் விலையில் தனது லாபத்தை மட்டும் எண்ணிக்கொள்ளும் கள்ள மாற்கெட் வியாபாரி தருமம் தயை இல்லாது தனது பணத்தைப் பெருக்க வகை காணல் போன்று நீவிரும் உங்கள் குலத்திற்குரிய தருமத்தை விடுத்து உண்மை நெறிகளை அகற்றி போலித்தனம் மிகுந்து வஞ்சனை வாதுசூதாகும் பொய்மைகளுடன் உங்கள் வாழ்வை நடத்து அதனுலே எத்தகைய தீங்கிலையும் கூசாது செய்யத் துணிந்துவிட்டீர்கள்

இனி உங்கட்கு எந்தவொரு அருள் நெறியின் சீலங்களை விதிகளை உண்மையான ஆகம முறைகளை நாம் எடுத்துச்சொன்னுலும் நீங்கள் அவற்றை ஒருபோதும் ஏற்கப்போகின்றவர் அன்று. ஏனெனில் நீங்கள் வசதிக்கேற்றபடி வாழப்போகின்றவாகளே ஒழிய உண்மைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒளிறூபுலி யதளாடையன் உமையஞ்சுதல் பொருட்டால்**
**பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து**
**வெளிறூபட விளையாடிய விகிர்தன்இரா வணனை**
**அளறூபட அடர்த்தானிடம் அண்ணாமலை யதுவே.**

8. ஒளிர்கின்ற புலியின் தோலை ஆடையாக உடையவன். உமையம்மை அஞ்சும் பொருட்டாக பிளிற் றோசை செய்யும் மதம் உடைய யானையின் முகத்தைப் பிடித்து அதன் தோலை உரித்து வெளியில் நின்று அதன் தோல் போர்த்து விளையாடிய மிகு சாமர்த்தியம் உடையவன். இராவணன் என்னும் இலங்கை அரசனை அவன் சிரம் தோள் நெரிபட்டு வேதனைப்படும் படி திருப்பாத விரலால் ஊன்றி அவனது கொடுமையை அடக்கிய பெருமானுக்கிடம் அண்ணாமலை அதுவேயாகும்.

கயாசூரன் என்னும் யானையை உரித்தமை உமையம்மை கண்டு நடுங்கினாள் என்பது வரலாறு. அம்பாளை அப்படி நடுங்கச்செய்தமை அவளுக்கு அருளும் பொருட்டாகவும் கொடுமையை நீக்கியருளும் பொருட்டாகவும் நின்றது.

கயாசூரன் என்றயானை முனிவரைக் கொல்லும்படி கலைத்து ஓட அம்முனிவர்கள் காசியில் சென்று எம் பெருமானிடம் அபயம் புக அந்நேரம் இலிங்கத்து நின்றும் சோதி உருவான வடிவுடன் தோன்றி வெளியாக வந்து அதன் முகத்தை எட்டிப் பிடித்து அடித்து வீழ்த்தி அதன் தோலை உரித்து முதுகினை மேல் போர்த்ததால் எல்லாச்சத்திகளின் தலைவி உமையம்மை இந்த அற்புதத்தைக் கண்டு நடுங்கவைத்தது எல்லாம் தனது ஆடலே என்பது குறிப்பு.

காத்தல் படைத்தல் அழித்தல் இறைவனது விளையாட்டு என்றமையால் வெளிறூபட விளையாடிய விகிர்தன் என்றார்,

**விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்**
**கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்**
**அளவாவணம் அழலாகிய அண்ணாமலை அண்ணல்**
**தளராமுலை முறுவல்உமை தலைவன்அடி சரணே.**

9. விளாமரத்தின் கனிகள் உதிரும் படி அதன் மீது பசுக்கன்றைத் தூக்கி எறிந்து அக்கனிகளையும் வீழ்த்தியது மன்றி கன்றையும் கொலை செய்த கடலின் நீல நிறம் போன்ற நாராயணக் கடவுளும் வேதம் ஓதிடும் வகை அவர் உந்தித் தாமரை மலர்மேல் உறைகின்ற கேடில்லாத புகழ் உடைய பிரமதேவனும இருவரும் அடி முடி அளந்து அறியாத வண்ணம் நெருப்பின் வடிவாகிய திரு அண்ணாமலை அண்ணல் தளர்விலாத முலை உடன் வளரும் கருணையின் முறுவல் தோற்றுபவளாய் நிற்கும் உமையின நாயன் அவரது திருவடிகள் நமது காப்பாகும்.

முன்பொருநாள் கிருஷ்ண பெருமான் இளம் பராயத்து நந்த கோபருடன் விளையாடும் பொழுது கம்சனால் ஏவப்பட்ட அசுரன் ஓர் பசுக்கன்று வடிவில் அவர் முன்சென்று நின்றான். அங்குள்ள பிள்ளைகள் அந்நேரம் ஓர் விளாமரத்தில் நிரம்ப உற்ற கனிகளைப் பிடுங்கித் தருமாறு வேண்டினார், பகவான் அசுரன் வருகையை உணர்ந்தாராய் தோழர்களை நோக்கி உங்கட்கு அம் மரத்திலுள்ள கனிகளை இக் கன்றால் தூக்கி எறிந்து வீழ்த்துகின்றேன் எனக் கூறி அசுரனை பசுக்கன்றைத் தூக்கி எறிந்தார். எறிந்த விசையில் கனிகள் யாவும் பிய்ந்து சிதறி வீழ்ந்தன. அசுரனும் வீழ்ந்து இறந்தான்,

அண்ணாமலையில் எம் பிராட்டி உண்ணாமுலை என்றவாறு நித்திய கன்னிகையாக நிற்றலால் தளரா முலை என்றார்.

**வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்**
**மார்பம்புதை மலிசீவர மறையாவரு வாரும்**
**ஆரம்பர்தம் உரைகொள்ளன்மின் அண்ணாமலை அண்ணல்**
**கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே.**

10. வேர்வை வந்து மேனியில் தோன்ற அதனால் உடம்பில் அழுக்குச் செறிந்து துர்நாற்றம் எடுக்க வெயிலில் நின்று காட்டி நாம் தவம் புரிவோர் என மக்களுக்கு காட்டி உழன்று திரிகின்ற சமணரும் தமது நெஞ்சம் முழுவதும் மறைய முற்றிலும் உடம்பை போர்த்து மூடிய வண்ணம் வெளிவந்து திரியும் புத்தர்களும் இவர்கள் வெளிவேடக்காரரான ஆரம்பர்கள், ஆதலினால் அவர் வார்த்தையை நீங்கள் கேட்டுக் கொள்ளாதீர். அதை விடுத்து திரு அண்ணாமலையில் இருக்கும் கடவுள் கூரிய வெண்மை ஒளி பரக்கும் மழுவாயுதத்தை உடைய பெருமான் அவன் திருவடிகளைச் சேர்வது உங்கட்கு நல்ல குணமாகும்,

தீயவை தீமையை வருவித்தலால் சமணர் புத்தரின் செயல்கள் ஆரம்பம் கொண்டமையின் வஞ்சனையாவது அதை கேளாதீர் என்றவாறு. வெளிவேடம் காட்டி மருட்டி பிறர் தம்மைப் பெரிதாக நினையச் செய்வது அது வஞ்சனை, தன்னிடத்து இல்லாததை வேடம்காட்டி வெருட்டல் நன்றன்று.

தெய்வத் தன்மையை பெறற்கு ஏதும் ஆரம்பம் இல்லாத பத்திமையின் வழிபாடே சிறந்தது. தான் வழிபடுவேன் என பிறர் அறிய கோலம் சொல்வது நற்குணமாகாது. ஆதலால் வெளிவேடம் காட்டி நம்பப் பண்ணுவார் சொலை நம்பாது உமது பாட்டில் நீர் அண்ணாமலை அண்ணல் திருவடிகளை நிததலும தொழுது சேருங்கள். அது பிறவியில் பெறும் பெரும் குணம் எனக் குறிப்பிடுகின்றார்.

**வெம்புந்திய கதிரோன்ஒளி விலங்கும்விரி சாரல்**
**அம்புந்திமூ வெயிலெய்தவன் அண்ணாமலை யதனைக்**
**கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான**
**சம்பந்தன தமிழ்வல்லவர் அடிபேணுதல் தவமே**

11. வெப்பம் தருகின்ற சூரியனது வெயிலின் ஒளிகள் கீழ வந்து படாது விலகச்செய்கின்ற பசுமைவிரித்த சோலைகளால் நிரம்பிய சாரலைக் கொண்டதாய் விளங்கிட; அம்புகளைச் செலுத்தி மூன்று மதிலையும் எரியச் செய்த பெருமான் எழுந்தருளும் திரு அண்ணாமலை அதனை; கொம்பர்களில் தங்கிய குயில்கள் கூவி மகிழும் குளிர்ந்த சீர்காழியில் அவதரித்த ஞான சம்பந்தனது தமிழ் இவை கற்று வல்லவராய் ஒழுகும் அடியார்கள் திருவடிகளை பேணுதலும் ஒரு தவமாகும்.

பய பத்தியுடன் பதிகத்தை ஓதிடுவார் பிறற்காக அல்லது பொருளிற்காக இதனைச் செய்யார்!. இவர்கள் பெரும் தவத்தனே வல்லவர். ஆகவே இப்பதிகத்தை ஒருவார் [illegible] இருப்பார் இவர் திருவடித் தொண்டு செய்தல் பெரும் தவமாகும் என்றவாறு.

கேற்ற வழி நீவீர் வாழப்போறவர் அன்று:

உண்மையை யார் பேணுவார் என்றால் ஆண்டவன் ஒருவன் இருக்கிறான். அவனுக்கு விசுவாசமாக நடந்திட வேண்டும் என்ற நம்பிக்கை கொண்டவன் தான் உண்மை பேணுவான். மற்றையோரால் அது முடியாது? இத்தகைய விசுவாசமுடையவர் தான் பய பத்தியுடன் நடப்பார். நாம் பழியைச் செய்தால் இறைவன் சித்தத்திற்கு முரணாகுமே என்று பயத்தால் எப்பொழுதும் தீமையை அகற்றிடுவர்,

எல்லாப் பழியிலும் இறைவன் பேரில் செய்யும் பழி பொல்லாதது. அது கொடிய இருளில் சேர்க்கும்: ஐயோ கடவுள் பெயரில் ஏமாற்றம செய்வதற்கு உடந்தையாயினோர் யாரும் நன்நெறிப் படமாட்டார். தீமையின் மேல் தீமையை இன்னும் பெருக்கி முடிவில் அந்த உயிர் இறந்தபின் எரிவாய் நரகக் குழியில் வீழும் என சைவ ஆகமங்கள் சொல்கின்றன.

இதில் இன்று நம்பிக்கை கொள்ளாமல் இவை வெறும் கட்டுக்கதை என்னலாம்! ஆனல் இவையாவும் அவரவர் உயிர் பிரியும் போது தெரியவரும். இப்போது உடம்பில் சத்து பலம் இருக்கும் நேரத்தில் எதையும் கேலி செய்து சிரிக்கலாம்; ஆனால் புலன்கள் ஐந்தும் நெறிகலங்கி அறிவும் அழிந்து சேடமும் மேற்கொள்ளும் போதுதான் செய்த செய்வித்த செய்தற்கு உடந்தையாய் இருந்த பழிகளின் விளைவு வரும்

ஒரு கோவில் கட்டிடம் யாவும் பூர்த்தியாக்கப்பட்ட பின்னரே தான் கும்பாபிஷேகம் நடத்தல் வேண்டும். மண்டபங்கள் மதில்கள் கோபுரங்கள் அரைகுறை நிலையில் இருக்கும் போது ஒரு காலமும் கும்பாபிசேகம் நடத்தப்படாது. அப்படி அரைகுறை வேலையில் கட்டிடங்களை வைத்துக் கொண்டு கும்பாபிசேசம் செய்வதில் ஏதும் பயனில்லை. அது மிகத் தவறான கருமம். இதற்குச் சான்றாக பெரியபுராணம் பூசலார் நாயனார் புராணம் பார்க்க.

எங்கு பொய்மை இருக்கோ அங்கு கடவுளும் பொய்யேயாகுவர். எங்கு மெய்மை இருக்கோ அங்கு கடவுளும் உண்மையில் வருவார். இதனை மாணிக்கவாசகர் ''பொய்யர் தம் பொய்யனே மெய்யர் மெய்யை'' எனக் கூறுவார்,

ஆதலினாலே அரும்பாடுபட்டு பொருள் தேடி கோயில் கட்டி புதுப்பித்து கும்பாபிசேகம் செய்யும் பொழுது உண்மையை விடுத்து பொய்மை உடைய பல செயல் செய்வது நன்றோ! இதனால் நாட்டில் பெரும் பழிகள் பொல்லாப்புகள் நிகழும், தமிழினம் உயராது ஒருக்காலும் சுதந்திரம் பெறாது!

நமது நாட்டில் பெரும்பாலான கோயில்களில் உண்மையிலாதவகை பொய்யும் ஏமாற்றமும் திருகுதாளங்களுடன் கலந்த திருவிழாக்களுமாகவே கோயில் கும்பாபிசேகங்கள் நடைபெறுகின்றன என்பதை மனச்சாட்சி உடையவர் மறுக்க மாட்டார். மிகவும் பழியான செயலை கோயில் நிகழ்த்திவிட்டு அதற்கு வாய்ப்பான சட்டத்தின் துணைகொண்டு தாம் தாம் செய்வது சரிஎன நிலைநாட்டலாம். அதுவன்றிக் காடைத்தனம் மூலம் இன்னும் பல பொய் பிரசாரவதந்திகள் மூலம் அல்லது சில அரசியல் பெரியார்களுக்கு விழா பாராட்டு எடுப்பதன்மூலம தமது பொய்களை சரியென்று காட்டலாம்,

எதுவாயினும் பொய் மெய்யாக மாறாது: அறியாமை மிகுந்த மக்கள் பொய்மைக்கு இணங்கலாம் ஆனால் தெய்வம் இணங்காது என்பதை திரும்பவும் நமது தமிழ் மக்களின் உய்திக்காக வேண்டி வலி உறுத்திக் கூறுகின்றேன். தயவுசெய்து தமிழ் இனமே நீ உலகில் ஒரு பிரபல்யமான சாதி என வாழ விரும்பின் கோயிலில் உண்மை நெறிகளைக் கடைபிடி.

உண்மைச் செயல்களுக்கு ஒருரூபா பணம் இருந்தாலும் அதற்குரிய வகை உண்மையாக அன்பர்கள் சித்த சுத்தியாக செய்தால் நிச்சயம் கோயிலில் அருள் பெருகும். பொய்யர் இலட்சக் கணக்கில் பணம் செலவழித்தும் அதில் ஏதாவது பிரயோசனமாவது அன்று. இவர்களின் செயல் தமிழ் இனத்தின் பெருமையைக் கீழாக்கி மதிப்பைக் கெடுத்து மங்கச்செய்யும என்பதை திடமாக நம்புங்கள். தமிழினம் உயர்ந்து மேற்பட வேண்டுமெனின் தயவு செய்து கோயில் கருமங்களில் விழா ஆடம்பரச் செயல்களை விடுத்து பொறுமையுடன் சாந்தியுடன் வேதங்கள் காட்டிய அறவழியில் ஒழுகுதலையே வேண்டுகின்றோம்.

இந்த வருடம் தைமாதத்தில் பல கும்பாபிஷேகங்கள் நடந்தன அருகில்உள்ள தாவடி கோண்டாவில் மேற்கில் உள்ள கோயிலிலும் கும்பாபிசேகம் நடந்தது, அவைஎல்லாம் பணம் படைத்தவர் பல ஒலிபெருக்கி கோண்பூட்டி தமது செயலை ஊருக்கே காண்பித்து கூக்குரல் இட்டனரே அன்றி வேறு ஏதும் வேத நியதிக்குரிய செயல்கள் அங்கு நடைபெறவில்லை கும்பாபிசேக யாக மண்டபங்களில் ஓதிய மந்திரங்கள் ஒலிபெருக்கியில் பல மைல்கள் கேட்கப்பட்டன, உண்மையில் அவை முறையான மந்திரம் ஓதல் அல்லாது இயந்திர வேகத்தில் போய்க் கொண்டு இருந்தன.

தம்பலகாமம் கோணேசர் ஆலயகும்பாபிசேகம் மிகவும் சீரற்ற நிலையில் முற்றிலுமே தடுமாற்றமும் அபசகுனமும அமைதியின்மையும் நிறைந்திருந்தன என அங்கு பங்குகொண்ட சில அந்தணர் நம்மிடம் எமது காரியாலயம் வந்து கவலை தெரிவித்தனர்.

அதில் ஒரு குரு சொன்னதை இங்கு குறிப்பிடுகின்றேன். ஐயா முப்பத்திமூன்றுகுண்டத்தில் பெரிதாய் செய்வதாக ஊருக்கு காட்டினார்கள். ஆனால் பிரதான கும்பத்தை மங்கல கலசமென எண்ணாது மண் கலசம் என எண்ணியே நடக்கக்கூடாத பல செயல்கள் நடத்தினார்கள் என்றார். நாம் இதற்கு என் சொல்லலாம். நிர்வாகம் விளக்கமற்றது நீதி அற்றது என்றே குறிப்பிடலாம்:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகம் என்று பேசஅறியாத உருவம் ஒன்றிலாத பருவம் சேரலே உண்மை காணும் நிலையென உணர்த்தும் ஈச உபநிடதம்

## உருவ வழிபாடு குருட்டு இருளில் சேர்க்கும் எனத் தெரிவிக்கின்றது. (சென்ற இதழ் தொடர்)

### பதினோராவது மந்திரம்

11 . ஒருவன் கல்வியையும் அதனால் பெறும் அறிவையும் அதுவன்றி கல்லாமையையும் அதனால் பெறுகின்ற அறியாமையும் ஒரேதன்மையாகக் கொண்டு ஒழுக வேண்டும்.

குறிப்பு — இந்த வாக்கியத்தில் நாம் அறியோம் என்றதும் முழுதும் உண்மை என்றதும் காணப்படுவன. அறியாமை அறிவு என்னும் இருமையும் ஒரே வழியாகக் கருதப்படல் நன்று என்பது பேசப்படுகின்றது. இதனை அறியாது அறிந்து குறியாது குறித்து என பெரியோர் சொல்வர். எம்பெருமான் சிவன் காணாதே காண்பான் நோக்காதே நோக்குவான் என்றெல்லாம் பேசிடுகின்றார்

அவ்வாறு ஒழுகுவான் எனின் அவன் மரணத்தை அறியாமை என்னும் நிலையில் வெல்வான். அறிவால் அழிவற்ற நித்திய நிலையைப் பெறுவான்.

அறியவில்லை என்பதும் அறிந்தோம் என்பதும் பிரியோசனமாகாது. அது இரண்டும் ஒன்றாகக் கொள்ளல் சொல்கின்றார் அறியாமையால் மரணத்தை வெல்வது என்றமை மரணத்தை வென்றிடுதலை வாழ்நாளில் ஆசையைப் பேணாமல் கொள்ளு என யாகசுவாமிகள கூறிடுகின்றார். பேணாமல் என்றது அறியாமை என்பதாகப் பொருள்படும்.

### பன்னீராவது மந்திரம்

12 . பிரகிருதி மாயா வடிவங்களை வணங்குவோர் குருட்டு இருளில் சென்று சேர்வார்கள். இதனிலும் கொடிய இருளில் சென்று சேர்வார்கள் உருவமாகும் இரணிய

சர்ப்பத்தின் தோற்றங்களை வணங்குவார்கள், இப்படியாக இதை உணர்ந்த அறிவாளிகள் எமக்குச் சொல்ல நாம் கேட்டுள்ளோம்.

குறிப்பு ; — உருவ வழிபாடு குறித்தது இம மந்திரம். எந்தவகை மாய வடிவங்கள் துர்க்கை காளி மாரி இவை வழிபடல் கொடிய இருளில் சேர்க்கும் என்பது தெளிவு; இதனாலே திருநாவுக்கரசர் சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லவோம் என்கின்றார்,

யோகசுவாமிகள் தமது ஒரு செயலால் இதை விளங்க வைக்கின்றார். முன் ஒரு நாள் இலங்கையில் சிங்களவர் தமிழர் ஒற்றுமையாக வாழவேணடும் என்பதற்காக நல்லூரில ஆறுமுக சுவாமிக்கு ஒரு அபிசேகம் செய்விக்கும் படி இங்குள்ள சில பெரியார்களிடம் யோகசுவாமி கூறினர்.

அதன்படி அப் பெரியார்கள் நல்லூர் ஆறுமுகப் பெருமானுக்கு விசேட அபிசேகம் சண்முகார்சசனை செய்து பிரசாதமாகப் பெற்ற மலர் மாலையும் எடுத்துக் கொண்டு யோக சுவாமிகளிடம் அதை கொடுக்கும் படி சென்றனர்.

அப்படியாக அவரிடம் சென்று அந்த மாலையை சுவாமியிடம் கொடுத்தலும் அதை வாங்காது சுவாமி அவர்களை நோக்கி பசாசிற்கு போட்டதை இங்கு கொண்டாறியலோ ? மனிதர் இருக்கும் இடத்து எனக்கு அது வேண்டாம் என்றார். அறிவு ஒளியால் திரி காலமும் உணரும் ஞானிகள் ஒருபோதும் உருவ வழிபாட்டில் தாங்கள் விருப்பம் கொள்வதில்லை என்றதாகும். ஞானச்சுடராக கடவுள் இருப்பதால் ஞானத்தால் ஞானிகள் தொழுவார்கள். அருணகிரியார் இதை அசட்டுக்கிரியை என்றதால் பிரகிருதி உருவ வழிபாடு கொடிய இருவில் சேர்க்கும்.

துர்க்கை காளி மாரி முதல் பல அம்மன்களை வழிபடுவோர் போகங்களைப் பெருக்குவார் அன்றி ஞான எல்லைக்குள் பிரவேசியார். இத் தெய்வங்களை வழிபடுவோர் கொலை காமம் முதலிய கொடுமைகளால் பீடிக்கப் படுகின்றார். கொலை காமம் பொருள் போகம் இவைகள் இருளின் சம்பந்தம் உடையன. எனவே இந்த உருவ வழிபாட்டில் வாழ் நாளைக் கழிப்பாரை குருட்டு இருளில் சேர்வார் எனப் பட்டது.

### பதின்மூன்றாவது மந்திரம்

13 , ஒரு காரியம் அவர்கள் சொல்கின்றனர், இந்த குருட்டு இருள் உருவ வழிபாட்டால் வந்தது என்றும் மற்றது உருவமில்லாத பொருளின் வழிபாட்டால் வந்தது என

வும் மொழிகின்றனர். இப்படியாக இதை தெளிந்த புத்திசாலிகளிடம் அவர்கள் எமக்கு போதிக்க கேட்டுள்ளோம்.

குறிப்பு ; — தானான தன்மைதனை தாம் அடைந்த மாதவர்கள் வானுதிமையைகளால் வாடுவரோ என யோகசுவாமிகள் கூறுகின்றார். தானான தன்மையில் தெளிந்தவர் முற்றிலும் தாம் ஒளியாகி இருப்பவர். அவர்கள் உலக விவகாரங்களில் சிக்கார். அவர்கட்கு பிரசங்கம் பெருமை புகழ் இவையாவும் எண்ணாதவர், தம்மையும் துறந்தே தலை நின்றவர், என்றும் தன்னை உணர்ந்து தானும் ஒன்று இன்றி என்றும் புலக்கணக் கதவு பூட்டினேன் சிந்தை அலக்கண் தீர்ந்த அறிவையும் கண்டேன் என்றும் அறிவு சொரூபமாகி இருப்பதே இங்கு பேசப்படுகின்றது.

### பதின்நான்காவது மந்திரம்

14 , ஒருவன் அருவமாகிய பிரகிருதியும் உருவமாகிய இரண்ணிய கற்பமும் ஒருவாகிய நியில் வணங்கப்பட வேண்டும் என்பதைத் தெரிந்து கொண்டவன் மரணத்தை

இரண்ணிய கற்ப வழிபட்டால் வென்று அழிவிலாத நித்தியத்துவத்தை பிர கிருதி வழிபாட்டின் பத்திமையால் பெறுகின்றான.

குறிப்பு — , துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற்சோதி இன்பமே உன்னைச் சிக்கெனப பிடித்தேன என்று மணிவாசகர் கூறிய நிலை அருவம் உருவம்ஆகும் எல்லாம் ஒன்றெனக் கண்டு பெற்றுக் கொள்ளும் நிலையால வந்தது.

ஓர் நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடல் என்றமையும் இந்த மந்திரத்தின் இயல்பில் இருப்பது.

யோகசுவாமி ஒருநாள் தோன்றுவதெல்லாம் அழியும கடவுளும் அறிவுடைய இயல்பல் வரில் இறக்கும் ஆதலால் அது அறிதற்கரிய அருவம் உருவம் எல்லாமாகிறது என்றார். இரண்ய கற்பம் என்பது தோற்றமிலாதகல் தோன்றும் முதற் பொருள் என்றவாறு.

### பதினைந்தாவது மந்திரம்

15 சூரியதேவனே! உம்மிடம் உண்மைப் பொருள் பொன்மயமான ஒளி வட்டத்தால் மூடப் பெற்றுள்ளது. அதனை தயவுசெய்து திறந்திடும். அதை அகற்றிவிடும் பல காலமாக அதனையே வழிபட்டு வந்த நான் உண்மையைக் காணும்படியாக;

குறிப்பு—. சூரியனிடத்துள்ளது உண்மைப் பொருளாவது சிவம். ஆனால் சூரியக் கடவுள் தனது வட்டத்தால் அவரை மூடி உள்ளார். ஆதலினால் அதனைத் திறந்து சூரியனில் உள்ள சிவஒளியைக் காணவேண்டியவாறு.

பரிதிவாழ் ஒளியாய் உன்பதாமே அல்லால் பற்றுநான் மற்று இலேன் கண்டாய் என்றார் மாணிக்க வாசகர். சூரியனது வடிவம் வெயில் அனைத்தும் சிவன் ஒளியை மறைத்த வாறு இருக்கின்றது.

பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப் படர்ந்ததோர் படர் ஒளி பரப்பு நீர் உறுதி எனவும் மணிவசகர் மொழிவது காண்க. ஆனால் நினைவதற்கு அது அரியது என்கின்றார். இதற்கு நாம் என்சொல்லலாம்,

திருவாசகம் முதல் தேவாரங்களின் உண்மைகள் அருமைகள் உகநிடதங்கட்கு உரை எழுதி தீபத்தில் வெளியிடும் போதுதான் தெளிவாயின. இதற்கு முன் இராகம் இழுத்து வடிவாகப் பாடுவதே தேவாரம் திருவாசகம் என்றிருந்தேன். ஆனும் இன்று அவைதான் வேதம் சிவன் ஓதியது என்பது தெளிவாகின்றது

### பதினாறாவது மந்திரம்

16 . ஓ! சத்துத் தருபவனே வானத்தில் தனித்து பிரகாசித்து திரிபவனே! எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவனே! பிரஜாபதியில் நின்றும் வெளிவந்தவனே உனது சத்தூட்டும் கிரணங்களை ஒடுக்கிக்கொள். உனது ஒளியை ஒடுக்கிக்கொள். உனது கருணையால் உன்னிடமுள்ள உண்மைப் பொருளை நான் பார்க்க விரும்புகின்றேன், உனது வடிவானதாகி உன்னிலும் அழகிய ஒளியானதாகி உண்மையில் உன்னிடம் இருக்கும் பரம் ஒளியை கண்டுகொள்ள; அதுவே உண்மையில் சிவன் அதுவே புருடன் அதுவே நானாகி உன்னில் இருப்பவன்.

குறிப்பு ... . தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை என யோகசுவாமிகள் கூறியருள்வது இதுவேயாகும் இதுவன்றி நாங்கள் சிவம் என நாளும் நண்ணு என யோகசுவாமி தமது பாடல் ஒன்றில் தெரிவிப்பதும் இந்த உபநிடத மந்திரத்தின் உண்மை வழியாகும்.

பூதங்கள் அல்ல பொறியல்ல வேறு புலன் அல்ல வேறு பேதங்கள் அல்ல அது வெறும் வெளியாவது என பரஞ்சோதி முனிவர் கூறுவதும் இதுவே.

உபநிடதத்து உச்சியில் விளைந்த போதக் காட்சிக்கும் காணப்படான் முருகன் என கந்தபுராணம் கூறி புதியதிற் புதியன் ஆதிக்கு ஆதியாய் நின்ற அமலன் என்றது!

ஆதலினால் சூரியனில் இருப்பதை சூரியன் அருள் கொண்டு காணவேண்டுகின்றார்.

### பதினேழாவது மந்திரம்

17 . இப்பொழுது எனது சுவாசம் எல்லாமாகி உள்ள அப் பொருளில் சேரட்டும். ஓ! அழிவற்ற பிராணனே எனது இந்த உடம்பு சாம்பலாக எரிந்து போகட்டும். ஓம்; ஓ! மனமே நீ நான் செய்த எல்லாவற்றையும் நினைத்துக் கொள் நினைத்துக்கொள்

குறிப்பு — . எத்தனை வஞ்சனை எத்தனை ஏமாற்று எத்தனை பொய் களவு காமம் முதல் பழிகட்கு மனமே காரணமாய் இருந்ததால் மனதை நோக்கி நீ என்செய்தாய் என்கின்றார்; உண்மைப் பொருளான தன்னை உணர்ந்த பின் உலகம் என்பது பேதமையாகின்றது. செத்திலாப் பத்தில் மணிவசகர் இதை நன்கு சொல்கின்றார்

### பதினெட்டாவது மந்திரம்

18 . ஓ அக்கினியே! எங்களை நாம் செய்யும் கருமங்களின் தூய ஆநந்தத்தைப் பெற வழிகாட்டுக. ஓஅக்கினிக் கடவுளே நீ எங்களது செயல்கள் யாவற்றையும் அறிவாய், அக்கினிக் கடவுளே எங்கள் பாவங்களையும் பிறரையும் எம்மையும் ஏமாற்றும் செயல்களையும் எரித்து அழித்துவிடும்! நாங்கள் எங்களது வாக்கான சொற்களால் எங்கள் வணக்கத்தைச் செய்கின்றோம்.

குறிப்பு—, அக்கினி தேவன் எல்லாவற்றையும் எரிப்பவர் அத்துடன் ஒளி வடிவானவர் கடவுளாவர்; துன்பம் துயர் அழுக்கு அனைத்தையும் எரிப்பவர். அவரது அருளால் பாவங்களை போக்குமாறு வேண்டப்படுவது யும் நினைகின்றான். ஆதலின் ஏமாற்று வஞ்சனை கபடம் பொய் ஆத்தனையும தன்னை தனது உயர்ந்த நிலையில்நின்றும் கீழ் இறக்கும் என்பதை உணர்ந்து எல்லாவற்றையும் எரிக்கின்ற அக்கினி பகவானை உள்ளத்து பாவச்செயலையும் எரிக்கும்படி வேண்டப்பட்டது.

இந்த மந்திரம் மனிதன் உண்மையை உணர்ந்த பிற்பாடு எழுகின்றதொன்று. உண்மையை உணர்ந்த பின் தான் ஆர் என்ற நிலையில் தெளிவு வந்தவுடன் தனது தீய செயல்களையும் தன் தீய செயல்களால் தான் என்னுவான் என்பதை

இந்த மந்திரங்களைத்தான் வடமொழியில் அந்தணர் ஓதி சாந்தி சாந்தி சாந்தி என முடிப்பர். ஆனால் அவர் நிலை எப்படி உணருங்கள்!

### சாந்தி தோத்திரம்

ஓம், அதுவே பூரணம் இதுவும் பூரணம்; இந்தப் பூரணம் அந்தப் பூரணத்தில் இருந்து வந்தது, எப்பொழுது இந்தப் பூரணம் அந்தப் பூரணத்தில் ஒடுங்குகின்றதோ அப்பொழுது மிகுதியாக உள்ளவை எப்லாம் பூரணமே!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்திசாலிகள் அறத்தையே விரும்புவர். மூடர்கள் மறத்தினை விடமாட்டார்
# சந்திரதீப நேயர்கள் தெரிவிக்கும் செய்திகள்

## காணக் கவலைதந்த கோணசர்கும்பாபிஷேகம்

தி ச. தியாகராசா
ஓய்வுபெற்ற ஆசிரியர்
கொழும்புத்துறை

கலியுகம் தீமைகளுக்கு முதலிடமும் நன்மைகளுக்கு இறுதிஸ்தானமும் கொடுக்கும் யுகம் அல்லவை மலிந்து நல்லன அருகுகின்ற காலம். இந்தக் கலியுகத்தில் அல்லவை புரிகின்ற மாந்தர்க்கு ஒருவனுவது ஒளியை (அறிவை)ப் புகட்ட இறைவன் திருவருளால் தோன்றியது சந்திரதீபம். அல்லவை புரியும் அறிவிலிகளுக்கு அவர்களது குறை குற்றங்களை ஆணித்தரமாக அஞ்சாது விளக்கித் தொண்டாற்றும் நல்ல ஐயா வணக்கம் பல.

அன்றொரு நாள் தங்கள் இல்லம் வந்திருந்தேன் காணுவான் விரும்பி. தீவினை காணவைக்க வில்லை. இன்னொருநாள் எதிர் பார்க்கிறேன், எப்போது கை கூடுமோ அறியேன்.

சவத்துடன் கார் செழுத்திய பின் 33 குண்டங்களிட்டு குட முழுக்குச் செய்த தம்பலகாமம் கோணேசர் கோவிலுக்குப் போயிருந்தேன். கோயிலில் அவசியஞ் செய்ய வேண்டிய திருப்பணிகளில் ¼ல் நாலிலொன்றுதானும் நன்கு முடியவில்லை. ஒரு பாட்டம் மழை பெய்தால் கோவிலில் நின்று அடியார்கள் தரிசிக்க ஏற்ற மண்டப வசதி கூட இல்லை. குடமுழுக்கு 25 ஆயிரம் தட்செணை கூலி முதலியவற்றிற்கு செலவழித்தார்களாம். என்ன பயன் கருதியோ தெரியாது.

2ம் வீதியில் கால் வைக்க முடியாது கல்லும் முள்ளும் கற்குவியல்களும். ஒரு 10 ஆயிரத்தைச் செலவு செய்து சிறப்பாக குடபாபிசேகத்தைச் செய்து போட்டு 15 ஆயிரத்தை திருப்பணிக்குச் செலவழித் திருக்கலாம். யார் செய்த சூது வாதோ தெரியாறு, அபசகுனம் காட்டிய பின்னும் பிடிவாதமாக குட முழுக்குச செய்யும் கொடி அறுந்து விழுந்தும் கொடியேற்றித் திருவிழா நடத்தும் மடமை மிக்க குருமாருக்கும் செய்விக்கும் தர்ம கர்த்தாக்களுக்கும் [கர்மகர்த்தாக்கள்] கிடைக்கப் போகும் தெய்வ தண்டனை யாதோ? அரசன் அன்றறுப்பான்; தெய்வம் நின்றறுக்கும்; என்பது முதுமொழி,

பின் பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயம் சென்றிருந்தேன். ஒரு நாள் அபிஷேகம் விழா முதலியவற்றை பார்த்து வந்தேன். சர்வகலாசாலை மாணவ மாணவிகளின் பத்தி சிரத்தையும் பண்பாடும் பாராட்டத்தக்கது. இந்தக் கலியுகத்தில் இப்படியும் இருக்கிறதே என்று வியக்க வண்டியிருந்தது. அதுவும் நாஸ்திகம் மலிந்த கலாசாலைகளில்; அருமையான நிர்வாகம்; அரிய கடவுட் தொண்டு.

குடமுழுக்கு மலராக சர்வ கலாசாலையார் இந்து தருமம் ஒரு நூல் வெளியிட்டிருக்கிறார்கள். மிக நன்றாக இருக்கிறது. விலை ரூபா 5-00 தான். சைவ சமயத்தின் தற்கால நிலை, சைவ அர்ச்சகரின் அவல நிலை, அவர்களை திருத்த என்ன செய்யலாமென்ற ஆலோசனை என்பன பல பல விஷயங்களடங்கியது. கட்டாயம் நீங்கள் வாசிக்க வேண்டியது. அத்துடன் உங்கள் அரிய தீபத்திலும் அதனை வெளியிட வேண்டுமென்பது எனது விருப்பம்.

''சைவப்பெருமக்களே சற்றுச் சிந்தியுங்கள்'' என்பது தலையங்கம். ஆணித்தரமான் எழுத்து மாணவரின மன நிறைவான ஆலோசனை. இந்துமாமன்றம் சைவபரிபாலனசபை, இந்து கலாச்சார அமைச்சரவை என்பனவற்றிற்கு அருமையான வேண்டுகோள். இவை சைவம் வளர்க்க வகை செய்யாவிடில் இன்னுஞ் சில ஆண்டுகளில் (அடுத்த தலைமுறை) சைவ ஒழுக்கம் சைவக் கோயில்கள் நன்ருக இருக்குமா என்பது சந்தேகம்.

அடுத்த மாதம் தொடக்கம் சைவக் கோவில்களில் விழாக்கள் ஆரம்பமாகும் பருவம். விழாக்கள் ஏன் செய்வது, எபபடிச் செய்யவேண்டும். எப்படியான குருமார் விழாக்களை நடத்த வேண்டும். விழா முடியுமகாலம் விழாக்களில் செலவிடப்படும் வீணசெலவுகள் (ஒலிபெருக்கி-கலை நிகழ்ச்சிகள், போலிபபந்தல்கள், (சிகரம்) என்பன அவசியம்தானு? எனபனவற்றை விளக்கி தங்கள் தீபமூலமும், ஆண்டுப்பிரசுர மூலமும் பிரசுரித்துப் பரப்பித் தொண்டாற்ற வேண்டும் என்பதை மிகப்பணிவுடன் வேண்டுகிறேன். இதற்குப் பணமும் தேவைதான். தருமசீலர்கள் சிலர் உதவுவார்கள். இறைவனும் நல்லருள் செய்வான். உங்கள் அபிப்பிராயத்தை எழுதவும். அல்லது ஒரு திகதி குறித்து ஒரு காட்டனுப்பினல், நான் நேரில் வந்து சம்பாஷிக்கின்றேன். தங்களைப் போன்ற அபிமானிகள் இத்தொண்டைச் செய்யாவிடில் வேறொருவரும் செய்யமாட்டார்கள்.

இக்காலப் பிராமணர்களை ஓரளவாவது திருத்தலாமென்று மூன்று முறை சங்கம் நிறுவித் தொண்டாற்றி அவர்களின் ஏச்சும் பேச்சும் வாங்கி இளைத்தவன். பாடசாலைப் பரிசோதகர் அளவெட்டி கி. சதாம்சிவஐயர் காலத்தில் முதற்சங்கம் அமைந்தது. ஏதோ இறையருள் கை கூடவில்லை.

இங்ஙனம்
தங்களன்புக்குரிய
தி.ச.தி. ஐயர்

## பெண்களின் கையை கிள்ளியபின் திருநீறு

ஆசிரியர்
சந்திரதீபம்
ஐயா,

பூசகர்கள் வீபூதி, சந்தணம், தீர்த்தம் முதலிய பிரசாதங்களை மககளுக்கு வளங்கும் பொழுது மக்கள் எவ்வளவு பயபத்தியுடன் அவற்றை ஆசாரியரிடம் பெற்றுக் கொள்கின்றார்கள். இந்த தயவு தாட்சண்யம், பயபத்தி இந்தப் பூசகர்களுக்கு உண்டா? மட்டக்களப்பில செங்குந்தர் பெருமக்களுக்கு சொந்தமான ... யில் இருந்து ... ஸௌயார் கோவிலில் பூசகராகவிருக்கும் குருக்கள் வீபூதிப் பிரசாதம் வழங்கும் பொழுது இப்படி ஆசாரமாக வழங்குவதில்லை பிராமணர் இப்படி பிரசாதம் கொடுக்கும்பொழுது மற்றவர் கையில் தன் கை படாமல் பிரசாதத்தை வழங்க வேண்டும் இந்தக் கோவிலில் அப்படி அப்பிராமணர் நடப்பதில்லை. விசேடமாக பெண்களுக்கு வீபூதிப் பிரசாதம் கொடுக்கும் பொழுது அவர்களின் கையில் தன் விரல்கள் முட்டத்தான் வீபூதிப் பிரசாதம் கொடுப்பார். இது அவ்விடத்தில் உள்ள யாவரும் அறிந்த விடயம். ஆனுல் ஒருவரும் இதை கண்டிக்க முற்படவில்லை.

அது மாத்திரமல்ல. அந்தப் பூசகர் ஒரு ஹோமியோபபதி டாக்டரும் கூட. அவர் கண்ட கண்ட நோயாளர்களின் கைகளைப் பிடித்துப் பார்ப்பதும் உண்டு. அவர்கள் தீட்டுத் துடக்கு இருப்பவர்கள் என்றும் இவருக்கு தெரியாது. ஆனுல் அத்துடன் தன்னைச் சுத்தப் படுத்தாமல் வந்தே பூசையும் செய்வார். அது மாத்திரமல்ல. இப்போ வேஷத்தையும் மாற்றி உள்ளார். அவர் இப்போ கால்சட்டை, மேலச்சட்டை, தொப்பி முதலியன அணிந்து கொண்டு தான் வைத்தியம் பார்க்கிறார்

இப்படிப் பட்டவரை ஏன் நிர்வாகம் வைத்துக் கொண்டு இருக்கோ தெரியவில்லை. அக் கோவில் நிர்வாகஸ்த்தராகிய பிரபல கூட்டணிப் பிரமுகரே தயவுசெய்து அந்தப் பூசகரை விலத்தி விட்டு வேறு ஆசார சீலரான பிராமணரை வையுங்கள்.

இப்படிக்கு
வே சின்னத்துரை

## யோகசுவாமிகள் குருபூசையிலும் கிள்ளு

ஓர் முறை யோகசுவாமிகள் குருபூசை நடந்தது. அன்று பல அன்பர் பங்கு கொண்டனர். அன்று சுவாமிக்கு பூசை செய்ய ஓர் அந்தணர் இளைஞர் வந்தார். பூசை முடிந்து வீபூதி பிரசாதம் கொடுக்கப் பட்டது. எலலோருக்கும் கொடுபட்டு வருமபோது ஓர் அழகிய இளம் சன்னிப் பெண்ணின் கையில் ஐயர் கிள்ளிவிட்டுக்கொடுத்தாராம். அப்பெண் ஐயரின் தீயநோகத்தை விளங்கிக் கொண்டு ஒன்றுதம் தான் பேசவில்லை.

அடுத்த குருபூசைக்கு அதே ஐயர் பூசை செய்திட வந்தார். அதே கன்னிப்பெண்ணும் அங்கு வந்தது, பூசை முடிந்து தீத்தம் திருநீறு பரிமாறும் போது அதே ஐயர் திருநீறு கொடுத்தார். எல்லோரும் கை நீட்டி வாங்கி அணிந்தணர், இப்பெண் மட்டுமே வாங்காது இருந்தாள்,

இது அருகு நின்ற உறவினருக்கு வியபபாக இருநதது. ஆதலினலே அப பெண்ணை ஏன திருநீறு வாங்கவில்லை எனக் கேட்டனர். அதற்கு சொன்ன பதில் சிறந்ததாக இலாமையின் சிறிது வற்புறுத்திக் கேட்டனர்.

அப்பொழுது அப் பெண் இரகசியமாக சென்ற குருபூசையின் போது இதே ஐயரிடம் நான் வாங்கும் போது எனது கையில் கிள்ளிவிட்டு ஐயர் திருநீறு தந்தார். அவரது தீய நோக்கத்தை உணர்ந்து கொண்டே நான இம்முறை சுவாமி குருபூசையில் அப்படியான ஒரு தீய செயலைச் செய்திட ஓர் சந்தர்பத்தை வருவியாத படி நான் திருநீறு வாங்கிட வில்லை. எனக் கூறினுள் அப் பெண்மணி,

என்னே அருமையான சிந்தை. அப் பெண்ணின் செயலை யோகசுவாமிகள் அருளுடன் கலந்தது என்னுமல் வேறு என் சொல்லலாம்?

## கொழும்பில் கிள்ளு ஐயர் செய்த திவசம்

எமது பத்திரிகையை ஆதரிக்கும் பல பெரியார்கள் எம்மை ஆதரிக்கும் நோக்கம் நாம் நமது அந்தணர்களை அவர்கள் செய்யும் பழி பாதகங்களைச் சுட்டிக் காண்பித்து அவர்களை மேம்லாங்கி நல்ல முறையாக நடத்திடும் படி வேண்டிக் கொள்வதை இதுதான் சரியான வழி என்று அப் பெரியார் உணர்ந்து கொண்டதாகும்.

உண்மையில் நமது குருமார் எனப்படும் பிராமணர்கள் உயர்ந்த ஒழுக்கங்களை மேலான நடத்தைகளை கைக்கொண்டால் அன்றி வேறு எந் நிலையாலும் எமது சைவம் வள்ராது,

நமது சமய நெறியில் அந்தணரை சைவம் என்ற உடம்பின் தலை என்று சொல்லலாம். தலை பிழையான பின் உடம்பின் ஏனைய பாகம் என்செய்யும். தலை பிழை படத் தொடங்கினுல் செய்வதெல்லாம் மாறு மாருகவே வரும்.

எமது யாழ்ப்பாண நாட்டில் பல அந்தணர் தமது உயர்ந்த கொழ்கைகளை விடுத்து மிக மிக சிந்தைத் தனங்கள் செய்கிறார்கள். அவர் தவற்றைச் சொல்லி ஐயா தயவு செய்து இப்படி நடத்தல் ஆகாது என்ருல் சொன்னதிற்காக இன்னம் கூடச் செய்கிருர்கள். இத்தகைய இழிந்த நடத்தை உடையவரை சிறுமை மனபபாங்குடையர் கடவுள் நம்பிக்கை இல்லாதவர் இன்னமும் தூண்டிவிட்டு பல கோமாளித்தனம செய்கிருர்.

சில நாட்களுக்கு முன் நமது பணியை ஆதரிக்கும் ஓர் அன்பரது கடை ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அந்நேரம் அக்கடை முதல்வரும் அவரது நன்பர்களும் இருந்தனர் நான் உள்ளாகச்செல்லலும என்னைக் கண்டது ஓரே சிரிப்பாக இருந்தது. நான் போகும் போது என்னை சுட்டிக் காண்பித்து சிரித்த படியால் இது என்ன என்று சிறிது எண்ணினேன். முன்னுல் அவர் மத்தியில் எமது பத்திரிகை இருந்தது.

மனம் சிறிது திகைப்புடன் உள்ளே சென்ற என்னைநோக்கி ஐயா வாங்கோ உங்களைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தோம். நீங்கள் வரக் கன்டதும் சிரிப்பு வந்தது என்று கூறி இருங்கோ என ஆசனம் தந்தனர்.

நான் அதில் இருந்தேன், இருந்த பின் அவரது நன்பாகள் என்னை நோக்கி உங்கள் பத்திரிகையைப் பார்த்தோம். அதில் நீங்கள் சொல்வது உண்மை! என்ன செய்யிறது பிராமணர் மிகத் தவருனவழி நடக்கிருர்கள். என்று கூறிவிட்டு கடை முதல்வரை நோக்கி அன்று நான் கொட்டாஞ் சேனையில் உறவினர் வீட்டிற்குச சென்றேன். அன்று அந்த திவசம். திவசத்திற்கு ஒரு ஐயரிடம் சொல்லி வைத்தார்கள். அந்த ஐயர் வரவில்லை. பதில் ஆர் மசசான் வந்தது தெரியுமா? எமட கிள்ளு ஐயாதான் வந்தார். எனக் கூறலும் கடை முதல்வர் எடே கிள்ளு ஐயரோ அங்கு திவசத்திற்கு வநதவா சரி சரி என்று ஓரே சிரிபபு அது மட்டனறி வேறு கதைகளும் இப்படியாக கிள்ளு ஐயர் என்றலும் நான் குறுக்கிட்டு என்ன கிள்ளு ஐயர் என்றதும் அவர் என்னை நோக்கி அவர் ஐயா வடிவான பெட்டையள் கையில கிள்ளிப் போட்டுத் தான் திருநீறு கொடுப்பார் என்றதும நாம் எல்லோரும் சிரித்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரை ஆரம்பம் என்னும் வெளிவேடம் பயனிலாமை உணர்த்தியசாது

## மெய்நின்ற அடியார்கள் வெளிவேடம் காட்டி மருட்டார். வேறுமாதிரி ஒன்றும் செய்யார்கள் அவர் பெருமை ஆர் அறிவார்

சைவத்தில் அன்பு நெறி அருள் நெறி எனஇருவகை நெறிகள் உண்டு. அன்புநெறி என்பது எவ்வுயிரும் தன் உயிர் போல் எண்ணுவதாகும். அன்பு நெறி எப்படி யாவது எனில் தருமத்தின் அடிப்படையாகும். அதாவது ஒருவன் தனது என்பும் பிறர்க்கு உரியன் என்ற வகையாக வாழும் தியாக வாழ்க்கையாகும்.

ஈச உப நிடதத்திற்கு விளக்கம் தந்த சங்கராச் சாரியார் அந்தணர்களை தியாக வாழ்வு உடையவர் என விவரிக்கின்ருர்.

இதை உணர்ந்தால் தன் நலமின்றி பிறர் வாழ்விற்காகத் தொண்டு புரிவார் அனைவரும் அந்தணர் எனப்படலாம். ஆதலினுலே அந்தணர் என்போர் அறவோர் எனப்படுவர், இப்படியான கருத்துப்பட யோகசுவாமி என்னிடம் தெரிவித்தார்.

அஃதிருப்ப சென்ற சுடர் தேவாரப் பதிகத்து சம்பந்தர் தவப் பணி குலச்சிறை என குலச்சிறையாரைச் சிறப்பிக்கின்ருர். தவம் பணிதல் என்ருல் யாது? அதுவே இன்று சிந்திக்க வேண்டும், தவம் செய்தல் என்பதின் அர்த்தம் எப்படி இருக்கும்?

திருஞான சம்பந்தர் இதற்கு மிகு விளக்கமாக உலகினில் இயற்கையை ஒழித்திட்டு அற்றவர்க்கு உற்ற சிவன் உறைகின்ற ஆலவாய் என்கின்ருர். உலகினில் இயற்கையை ஒழித்தல் எப்படி? இயற்கை என்ருல் என்ன?

ஓர் ஆடவன் சிறு பிள்ளைப் பருவம் நீங்கி 16 வயது மேற் பட்டவுடன் காம நோய் அவனைப் பீடித்தல் இயற்கை. பெண்கட்கு 11 வயதின் மேல் காம நோய் தொடுவது இயற்கை! இவை உடம்புடன் கூடியது, இதில் நின்று நீங்குவரர் யாருமே இலர். 60 70 80 யவதிலும் இந்த உணர்ச்சிஎழவே செய்யும்!

ஓர் ஆடவன் ஒரு பெண்ணின் அருகில் அமர்ந்தவுடன் அவள் எழிலில் மோகங் கொண்டு சிந்தையால் தீண்டுவான். வெளிப் படையாக உடல் உறவிற்குரிய சேட்டைகளை இரகசியமாக வாதல் செய்வான். செய்ய முற்படுவான், வாய்த்தால் மகிழ்ச்சி. வெளிப்படக் காணப் பட்டால் வெட்கம் நாணம் என்ற வகை பயத்தால் இத்தகைய செயல்களில் நின்றும் ஒதுங்குவான். இது உலகில் எல்லா உயிரினங்கட்கும் உண்டு.

ஆனுல் இதை வெல்வாரும் உண்டு! அவர்தான் திருவருள் காட்சத்தால் துரிய நிலையில் சிவன் திருவடி சூட்டப் பெற்று ஆட்கொண்டருளப் பெற்றவர் அன்றி மற்றையோர் யாவர்க்கும் காம நோய் உண்டு.

தென் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த எல்லாச் சாமியளும் பேச்சாளரும் இந்தஇயற்கையில் அகப். பட்டவரே 1 — 2 3 — 4 என்ற வகை இயற்கை விளையாட்டில் சிக்கியவரே! இற்றைவரையில் தென் இந்தியாவில் இருந்து இங்கு வந்து போன ஒருவரையும் நான் இதில் ஈடுபடாதவர் எனச் சொல்ல மாட்டேன். அவர்களுடைய இரகசிய விளையாட்டுகள் பல உண்டு. கொழும்பு வெள்ளவத்தையில் இதற்குப் பெரிய ஆதாரம் உண்டு.

காம உணர்வு போல் கோபம் கொள்ளல் பொருமைப் (குரோதம்) படல் மதம் பிடித்தல் (தனது கொள்கையில் அகங்காரம்) (மோகம்) ஒன்றில் அளவிறந்த பற்று காசு காணி உத்தியோகம் அடுத்து பிறரை நிற்தித்தல் இகழ்தல் பிறர் இல்லா இடத்து அவர் பற்றி அவதூறு செய்தல் இவையாவும். சைவ நெறியில் நீக்கப்பட வேண்டியவை;

ஆறுமுக நாவலரிடத்து நான் அறிந்த வகை காம உணர்வு ஒன்று மயிலாது மற்றும் கோபம் குரோதம் மதம் மோகம் மாற்சாரியம் புறங் கூறல் இவை யாவும் நிரம்ப உண்டு. அவர் வரலாற்றுச் சரித்திரம் இதற்குச் சான்ருகும்.

திருநெல்வேலி மணி கட்டிய பண்டிதர் எழுதிய நாவலன் என்னும் நூலைப் படித்தால் நாவலரில் மேற் சொல்லிய குணங்கள் யாவும் இருந்துள்ளதென்பது தெளியப்படும். இத்தகைய குணமுடையவரை குரவர் வரிசையில் வைப்பது எத்தகைய பேதனம்.

சைவம் என்ருல் தனித்து அநுட்டானம் செய்து குறிவைத்தலுடன் அமையாது. இன்னமும் வேறு பல சீலங்கள் இருக்க வேண்டும். நாவலர் அநுட்டானம் குறி சமயல் சாப்பாடு இவ்வளவுடன் நின்றவர். சில சிவ புண்ணியம் பற்றிச் சொன்னவர். இவருடைய நிலையில் சைவம் என்ருல் வீடு வாசல் கூட்டி கழுவி கோலம் போட்டு குறி வைத்த அவ்வளவுடன் நின்றது. சாப்பிடும் போது செய்வன சாப்பிட்ட பின் செய்வன இவைகள் முறைப்படி சொன்ஞர். ஆனுல் அதற்கு மேல் என்ன என்பது அவர்க்கே தெரியாது.

ஏதோ கிறிஸ்த்தவரை எதிர்த்தார் சைவத்தைக் காத்தார் எனல் பல பேதையர் சொல்கின்ருர்கள்" ஆனுல் இன்று சைவக் கோவில் எல்லாம் கிறீஸ்த்தவ கோயிலின் கலாச்சாரமாக மாறி உள்ளன. கோயிலை மதியாது போவதற்கு நாவலரின் சில அடம்பிடித்த கொள்கைகள் வழி காட்டியாக அமைந்தன.

நாவலர் இல்லாவிட்டால் சைவம் அழிந்திருக்கும் என சிலர் சொல்கிருர்கள். இவர்கட்கு சைவம் என்ருல் என்ன என்றதே தெரியாதே அப்படிப் பேசுகிருர்கள் என நாம் நினைக்க வேண்டும்.

சைவம் என்ருல் சிவனுடன் தொடர் புடையது, எல்லாமாய் அல்லவுமாய் என்றும் உள்ள உண்மைப் பொருளாக நிற்கும் சிவம் ஒன்று. அவன் தொடர்புடைய சைவம் அவன் அருளால் வளர்வது என்பதால் சைவம் என்பது உலகம் அழிந்தாலும் அது அழியாது. இதனைத் தேர்தல் ஞானம் எனப்படும்.

இதைத் தெளிந்து கொண்ட அறிவு அதே மாயமாய் அதனின்றும் பிரிாததாய் நினைப்பு மறப்புஅற்ற நிலையில் அன்புருவாகி அதுவேயாகி நிற்றுல் போதம் எனப்படும்.

இந்தவகை தெளிவு பெற்ருரை சிவனடியார்கள் என பெரியோர் போற்றுவர். இவர்கள் அன்புருவானவர்கள் தாம் நினைத்தபடி நடப்பவர்கள். உலகை வெல்பவர்கள். கேடும் செல்வமும் சிறப்பும் இன்மை யாவும் இல்லாதவர்கள். இவர்களை பெரிய புராணம் வேண்டுமாறு விருப்புறும் வேடத்தார் எனவும் அவர் பெருமை அறிதற்கரியது எனவும் ஒரு சொல்லால் சொல்கின்றது.

ஆறுமுகநாவலர் இருந்த இல்லம் மிகத் தூய்மையுடன் பேணப்பட்டிருக்கும் தினமும் அவர் இல்லத்து வெளிப்புறத் திண்ணை மெழுகிமிகு புனிதமாக இருக்கும். இந்தவெளிப்புறத்திண்ணையில் பைத்தியக்காரன் போன்ற ஒருசாது தெருவெல்லாம் திரிபவர் சிறிது தங்கிட அத்திண்ணையில் வந்திருப்பார்.

வந்திருக்கும் அந்தச்சாது சும்மா வந்து இருக்கார். ஏனெனில் அவர் வீதிஎல்லாம் பொறிக்கிய குப்பைகுஞ்சலை தனது கந்தைத் துணியில் இட்டு முடிந்து அந்தமுடிச்சுடன் வந்திருப்பார். ஆளைப் பார்த்தால் பைபித்தியப்புலம்பல் உடை தோய்த்து அறியாத கந்தைச் சீலை இந்த வெளிப்புனிதமற்ற நிலையில் குப்பை முடிச்சுடன் சாதுவிருந்தால் குப்பை முடிச்சால் சிலகுந்பை அவர் இருக்கும் திண்ணையில் வழுகி வீழும். அதைக் கவனியாதவர்போல சாதுஇருப்பார்,

நாவலர் இவர் நிலையைக் கண்டார். இந்தவியரன் எமது திண்ணையில் குப்பை போடுகிருன் எனநினைந்து அவரை நேக்கி அடேவிசரா இன்று தொடக்கம் நீ இங்கு வரக்கூடாது. குப்பைகொட்டக் கூடாது என்ருர்.

ஆனல்விசரன் அவர் சொன்னும் மறுநாளும் வந்து குப்பையை அதேதிண்ணையில் கொட்டினுன். அன்றும் அவனைநாவலர் ஏசிக்கலைத்தார் இனிவரக் கூடாது என்ருர். ஆனல் பின்னரும் விசரன் அதேதிண்ணையில் வந்து இருந்தான். நாவலர் நினைத்தார் இந்த விசரனை சும்மா ஏசினல் இவன். கேளான் இனி வந்தால் இவனுக்கு அடிக்க வேண்டும் எனத் தீர்மானித்தார். அதற்காக ஒரு பொல்லும் எடுத்து ஆயத்தமாக வைத்திருந்தார்.

விசரன் மறுநாள் வந்தான். விசரன் வந்து திண்ணையில் இருப்பதைக் கண்ட நாவலர் தாம் அவனை அடிப்பதற்கு ஆயத்தமாக வைத்திருந்த பொல்லையும் எடுத்துக் கொண்டு அவனை அடிக்கும்படி ஓடினுர். நாவலர் பொல்லுடன் வருவதைக் கண்ட விசரன் பயந்தவன் போல் எழுந்து ஓடினுன்.

விசரன் ஓடியபடியால் அவனை நாவலர் அடிக்கமுடியவில்லை. பொல்லால் அவன் மீது எறிவதற்கு பின்னல் துரத்திப் போய் தன்பொல்லைஅவன்மீது படும்படி எறிந்தார்.

என்ன ஆச்சரியம் நாவலர் எறிந்தஎறி விசரன் மீது படாதபடி அவ்வழியால் அந்நேரம் குறுக்காக ஓடிவந்த பூனைமீது படலும் பூனை அடிபட்டு அலறிக் கொண்டு மயங்கி வீழ்ந்து இறந்தது.

நாவலர் இதை எதிர் பார்க்கவில்லை. இதுகண்டதும் திகைத்தார். ஐயே என கூறி இதென்ன பழி எனக்கு இங்கு சூழ்ந்தது என ஏங்கியபடி அந்த இடத்தில் அசைவற்று நின்ருர். பூனை அடிபட்டு தெருவில் கிடக்தது. யந்தவன் போல் ஓடிய விசரன் தூரத்தே நின்று இதைக் கண்டருளினுன். இறந்த அப் பூனைமீது பரிந்த மனத்தில் பதைப்புத்தோன்ற பூனை கிடந்த இடத்திற்கு வந்தான். பூனையை உற்று நோக்கினுன். இறந்துகிடக்கும் பூனையைத் தன்கையால் தூக்கினுன், நிலமிசை இருந்து கொண்டு அப்பூனையை தன்மடிமீது கிடத்தினுன். கிடத்தியவாறே அதை தன் கையால் தடவினுன். ஐயோபாவம் என்னல் அடி பட்டாயே என்ருன். இதற்கு என்செய்வேன் என்றுபல முறை சொல்லி அப்பூனையின்உடலைத் தடவினுன்.

என்ன ஆச்சரியம் மடிமீது கிடந்த பூனை உயிர் பெற்றெழுந்து விசரனது மடியைவிட்டுக் குதித்து ஓடியது. நாவலர் இதைக் கண்டார் இதென்னமாயம் இதுவென நினைத்தார். இது அற்புதம் என்ருர். இவன்விசரன் அல்ல ஓர்யகான் எனஎண்ணி மிக்க பணிவுடன் விசரனைக்கிட்டும் படிநெருங்கினுர், தன்னை மீளவும் அடிக்க வருகிருர் போலும் எனநினைந்து பயந்து ஓடுவான் போல விசரன் தன்னை நாவலர் அணுகிட எட்டாது ஓடிவிட்டான்.

அன்றிலிருந்து நாவலர் வாழ்வில் ஓர்மாற்றம். இப்படியாக இக்கதையை முன்னைநாள் இலங்கை டெயிலி நியூஸ் பத்திரிகையின் உதவி ஆசிரியராய் இருந்த தலையாளியைச் சேர்ந்த சிதம்பர நாதர் என்பவர் அடியேன் சிவதொண்டன் நிலையத்தில் பயன் சொல்கின்ற காலத்தில் என்னிடம்தெரிவித்துக் கொண்டார்.

# கோவிலில்கொடுமைகள் பெருகினுல் ஊரில் சாந்தம் எப்படி வரும்

தெல்லிப்பழையில் ஓர் விநாயகர் ஆலயத்தில் ஒருவர் இறைவனுக்காகச் செய்து கொடுத்த மூஷிகம் (எலி) பலிபீடம் இவைகள் ஏற்கப்படாமல் நீக்கப்பட்டது. நீக்கப்பட்டதுமன்றி அவைகள் கோபவெறியுடன் உடைத்து எறியப்பட்டன.

கோவில் உரிமை பாராட்டுவதால் இந்தச் சங்கடம் உருவாகியது. இதில் வேதனை தரும் செய்தி என்னவென்ருல் தறபோது கோவிலை தனது சொந்தமெனப் பாராட்டும் முகாமையாளர் அன்பர் கொடுத்த மூஷிகம் (எலி) அதனை உடைத்து எறிந்தாராம்.

இறைவன் சன்நிதி இது என்றும் கருதாமல் மன அழுக்கு எவ்வளவு தூரம் பெருகிக் கொண்டது. இதனுலே நமது சைவமக்கள் எவ்வளவு தூரம் பின்தங்கி உள்ளார்கள் என்பது வெளிப்படை, கோவில் பெயரில் கொடுமை இவற்றைச் செய்வது நமது சமயத்தில் எப் பொழுதுமே இல்லை.

கோயில் பெயரில் நீதித் தலத்தில் சென்று நடை பெற்றதை நடைபெறவில்லை என்ன பல பொய் பேசும் வழக்கம் எமது சைவநெறியில் பல ஆண்டுகளாகப் பெருகி வந்துள்ளது, இதனுலே எம் இனத்தில் எவ்வளவு தூரம் பிளவுகள் ஏற்படுகின்றன. இறைவன் இருப்பிடத்து அன்புநெறி கடைப்பிடித்திட மாட்டாத நாம் இனி எந்த இடத்தில் சென்று அன்பு பாராட்டலாம்.

கோயில் சென்று நாம் சண்டை வாக்குவாதம் இவற்றைப் புரிவதிலும் கோயில் செல்லாமல் விடல் மேம் பட்டது.

அன்பு அருள் இவற்றிற்கு இலக்காக வாழ வேண்டிய பிராமணன் தனது பொய்யால் வரும்படியை பெருக்கு வதற்கு தனக்கு தோதானவரை தன்பக்கம் சேர்த்து பூசை பண்ணுகிருனே,

குறிப்பிட்ட இந்தக் கோவிலில் ஐயர் தனது சார்புடைய மக்களுக்கு கோவில் மண்டபத்தில் கதிரை போட்டு இருக்கவைக்கிரும். இதற்கு நாம் என்ன சொலமுடியும். நெறி தப்பிய சண்டாளரை நாம் என் செய்யலாம்.

இத்தகைய பழிகள் கோவிலில பெருகினுல் நமது தமிழ் இனம் ஒருபோதும் சுதந்திரம் அடையாது. தமிழா விடுதலைக்காக கோயில வாய்தலில் சத்தியாக் கிரகம் இருக்கும் தமிழர் கூட்டணியினர் இந்த அக்கிர மங்களுக்கு என் சொல்வார்?. சாத்வீகம் என்ருல் என்ன என்பது தெரியுமோ? இறைவன் சந்நிதியில் குணங்கள் திருந்து சாத்வீக மாதல் அதுவே உண்மை நிலைஎன பெரிய புராணம் சொல்வதை ஏற்றுக் கொள்வாரோ?

# இப்பத்திரிகையும் சந்தா விபரமும்

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கிலிருக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திர அச்சகத்தில் பதித்து பிரசுரிக்கப்பட்டது. சந்திரதீபம் என்னும் பதிபில் சிவன் வந்து சாத்தரங்களை அருள் செய்த வழியைப் பின்பற்றி சைவ நீதியை உணர்த்தும் பணியைக் கொண்டது.

இவன் பணியாக கொள்வது தருமம் என்ருலும் முனிபர் முன்பவும் பொருளாலே முடியும் என்றபடி இப்பத்திரிகையை எம்மிடம் பெறும் அன்பர்களை இதன் வருட சந்தாவாக ரூபா 25 தந்துதவுமாறு கேட்கிருேம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org